# கங்கைகொண்ட சோழபுரம்
# இராசேந்திர சோழன் அகழ்வைப்பகம்

# கங்கைகொண்ட சோழபுரம்
# இராசேந்திர சோழன் அகழ்வைப்பகம்


பதிப்பாசிரியர்

தி.ஸ்ரீ. ஸ்ரீதர், இ.ஆ.ப.

சிறப்பு ஆணையர், தொல்லியல்துறை

ஆசிரியர்கள்:

கி. ஸ்ரீதரன், எம்.ஏ

து. துளசிராமன், எம்.ஏ

ச. பரணன், எம்.ஏ.எம்.பில்



தமிழ்நாடு அரசு

தொல்லியல் துறை

2005

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title | : | **Gangaikonda cholapuram Rajendra Cholan Agazhvaippgam** |
| Authors | : | K. Sridaran, D.Thulasiraman, S. Paranan |
| Copy right | : | Tamil Nadu State Department of Archaeology |
| Subject | : | Archaeology |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Publication No & year | : | 167, 2005 |
| Type Point | : | 11 |
| No. of Pages | : | viii + 63 |
| Paper | : | 80 Gsm Maplitho |
| Type Setter | : | **Annai Graphics,** Chennai - 14. Phone : 24800006. |
| Printer | : | **TAMCOS,** Royapettah, Chennai - 600 014. |
| Publisher | : | State Department of Archaeology, Halls Road, Egmore, Chennai - 8 |
| Price | : | **Rs. 25/-** |



11826

930.1


முன் அட்டை :

கங்கை கொண்ட சோழபுரம் கோயில், சோழ கங்கம் ஏரி,
எசாலம் செப்பேட்டின் அரச முத்திரை

பின் அட்டை :

சண்டேசுவர அனுக்கிரக மூர்த்தி சிற்பம்,
மாளிகை மேடு அகழாய்வு குழியின் தோற்றம்

# பதிப்புரை

தமிழ் நாட்டில் உள்ள வரலாற்றுச் சிறப்பு மிக்க ஊர்களில் கங்கை கொண்ட சோழபுரமும் ஒன்று. சோழர் வரலாற்றில் இவ்வூர் முக்கிய இடம் பெற்று விளங்குகிறது. சுமார் 250 ஆண்டுகள் சோழ மன்னர்களின் தலைநகரமாக விளங்கிய பெருமை இவ்வூருக் குடையது. இங்கு உள்ள கங்கை கொண்ட சோழீச்சுரம் கோயில் சோழர் கலை வரலாற்றுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது. இக்கோயிலில் காணப்படும் சண்டேச அனுக்கிரக மூர்த்தி, ஞான சரசுவதி, ஆடவல்லான் சிற்பங்கள் உலகப் புகழ்பெற்றவை. கலையழகு மிக்க இக்கோயிலை உலக பாரம்பரியச் சின்னமாக (World Heritage Monument) ஐக்கிய நாட்டு பாரம்பரியக் குழு (Unesco) அறிவித்துள்ளது. இக்கோயிலை மத்திய தொல்பொருள் ஆய்வுத்துறை பராமரித்து வருகிறது.

இவ்வூரில் தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை 1980, 1981, 1985, 1987, மற்றும் 1991 ஆண்டுகளில் மாளிகைமேடு, மண்மலை, அகழிமேடு, கல்குளம், பொன்னேரி போன்ற பகுதிகளில் அகழாய்வினை மேற் கொண்டது. மாளிகைமேடு பகுதியில் அகழாய்வினை மேற்கொண்ட பொழுது சோழ மன்னர்கள் வாழ்ந்த அரண்மனைப் பகுதிகள் வெளிபடுத்தப் பட்டன.

சுமார் 1000 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த கட்டடக்கலையின் சிறப்பினை அறிந்து கொள்ள மாளிகை மேடு அகழாய்வு பெரிதும் உதவுகிறது. இங்கு நடைபெற்ற அகழாய்வில் கிடைத்த தொல்கலைப் பொருட்கள் 1981ஆம் ஆண்டு இவ்வூரில் துவக்கப்பட்ட அகழ்வைப்பகத்தில் காட்சியாக வைக்கப்பட்டுள்ளன. மேலும் இப்பகுதியில் சேகரிக்கப்பட்ட கற்சிற்பங்கள், ஓலைச்சுவடிகள், செப்புத் திருமேனிகள் யாவும்

காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. அகழாய்வில் வெளிப்படுத்தப் பட்ட கட்டடப்பகுதிகள், பொது மக்கள் காண அப்படியே காட்சிப்படுத்தப் பட்டுள்ளன. தமிழ்நாட்டிலேயே பெரிய அளவில் அகழ்ந்து வெளிப்படுத்தப் பட்டுப் பாதுகாக்கப்பட்டு வரும் பெருமை உடையவை கங்கை கொண்ட சோழபுரம் அரண்மனைப் பகுதிகளாகும்.

கங்கை கொண்ட சோழபுரம் மற்றும் இங்கு மேற்கொண்ட அகழாய்வு, அதில் கிடைத்த வரலாற்றுச் சிறப்புமிக்க கலைப் பொருட்கள், இப்பகுதியைச் சுற்றியுள்ள ஊர்களின் சிறப்புகள், இப்பகுதியில் இத்துறையால் பாதுகாக்கப் படும் செங்க மேட்டில் உள்ள கலிங்கச்சிற்பங்கள் மற்றும் கீழையூர் இரட்டைக் கோயில்கள் ஆகியவை பற்றி எடுத்துக் கூறும் கையேடாக (Guide Book) இந்நூல் விளங்குகிறது. இக்கையேட்டினை எழுதிய திரு. கி.ஸ்ரீதரன் பதிவுஅலுவலர், திரு. து. துளசிராமன் காப்பாட்சியர், திரு. ச.பரணன் காப்பாட்சியர் ஆகியோரைப் பாராட்டுகிறேன். மேலும் இந்நூலுக்கு வேண்டிய நிழற்படங்களையும், மேலட்டையையும் வடிவமைத்து தந்த இத்துறை நிழற்படம் எடுப்பவர் திரு. மு.த.ஸ்ரீதரன் அவர்களையும் பாராட்டுகிறேன். வரலாற்றுச் சிறப்பு மிக்க இவ்வூரைக் காணவரும் அனைவருக்கும் இந்நூல் பெரிதும் பயன்படும் எனக் கருதுகிறேன்.

தி.ஸ்ரீ. ஸ்ரீதர்
சிறப்பு ஆணையர்

# பொருளடக்கம்


1. வரலாற்றில் கங்கை கொண்ட சோழபுரம் ..... 1
2. கங்கை கொண்ட சோழீச்சுரம் ..... 4
3. கங்கை கொண்ட சோழபுரம் ..... 9

ஊரும் மாளிகையும் ..... 10


சோழகங்கம் (பொன்னேரி) ..... 12

4. கங்கை கொண்ட சோழபுரம் – அகழாய்வு ..... 13
5. அகழ்வைப்பகம் (காட்சிப் பொருட்கள்) ..... 23
   1. அகழாய்வுப் பொருட்கள்
   2. சிற்பங்கள்
   3. செப்புத் திருமேனிகள்
   4. கல்வெட்டுகள்
   5. ஓலைச் சுவடிகள்
   6. போர்கருவிகள்
   7. பிறகாட்சிப் பொருட்கள்
6. பாதுக்காக்கப்பட்ட வரலாற்றுச் சின்னங்கள்

   (அ) செங்கமேடு ..... 32

   (ஆ) மேலப்பழுவூர் (கீழையூர்) ..... 33

7. நகர்வலம் – சுற்றியுள்ள ஊர்களின் சிறப்புகள் ..... 34
8. துணைநூற்பட்டியல் ..... 38
9. முதலாம் இராஜேந்திரன்–வரலாற்று குறிப்புகள் ..... 40
10. நிழற்படங்கள் ..... 45



கங்கை கொண்ட சோழபுரம் – வரைபடம்

# வரலாற்றில் கங்கை கொண்ட சோழபுரம்

தமிழக வரலாற்றில் சோழ மன்னர்கள் தனி இடம் பெற்று விளங்குகின்றனர். விஜயாலயன் தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு சோழர் ஆட்சியை நிறுவினான். முதலாம் இராசராச சோழன் காலம் வரை தஞ்சை, தலைநகராக விளங்கியது. இராசராசனின் மைந்தன் முதலாம் இராசேந்திரன் காலத்தில் கங்கை கொண்ட சோழபுரம் தலைநகராக உருவாக்கப்பட்டது. ஏறக் குறைய சோழ மன்னர்களின் ஆட்சி இறுதி வரை கங்கைகொண்ட சோழபுரமே தலை நகராக விளங்கியது.

சுமார் 250 ஆண்டுகள் தென்னிந்தியாவிலேயே ஈடு இணையற்ற தலைநகராக விளங்கிய கங்கை கொண்ட சோழபுரம் இன்று சிற்றூராகக் காட்சி அளித்தாலும், பல அரிய வரலாற்றுச் சிறப்புகளைத் தன்னகத்தே கொண்டு விளங்குகிறது.

திருச்சியிலிருந்து அரியலூர் வழியாகச் சிதம்பரம் செல்லும் சாலையில் 103 கி.மீ தொலைவில் இவ்வூர் அமைந் துள்ளது. கும்பகோணத்திலிருந்து அரியலூர் செல்லும் பேருந்துகளும் இவ்வூர் வழியே செல்லுகின்றன. சிதம்பரத்தி லிருந்து சுமார் 55 கி.மீ தொலைவில் கங்கை கொண்ட சோழபுரம் அமைந்துள்ளது. கும்பகோணம் – சென்னை நெடுஞ்சாலை கங்கை கொண்ட சோழபுரத்திற்கு அருகே செல்வதால் இவ்வூரினை எளிதாகச் சென்றடையலாம்.

இராசேந்திர சோழன் வடக்கே கங்கை வரை தன் படையை அனுப்பிப் பெரும் வெற்றி கண்டு 'கங்கை கொண்ட சோழன்' என்னும் பட்டம் ஏற்றதும் இம்மா பெரும் நகரை நிறுவினான். 'கங்கை கொண்ட சோழீச்சுரம்' என்ற பெயர் கொண்ட ஒப்பற்றக் கோயிலையும் இங்கே எடுப்பித்தான்.

கங்கை கொண்ட சோழபுரம், கங்காபுரி, கங்காகுண்டம், கங்கை மாநகர், என்ற பல பெயர்களில் அழைக்கப்படுகிறது.

கருவூர்த் தேவரால் கங்கைகொண்ட சோழீச்சுரரைப் போற்றிப் பாடப்பட்ட திருவிசைப்பாப் பதிகங்கள், கலிங்கத்துப்பரணி, மூவருலா, விக்ரமாங்க தேவ சரிதம் ஆகிய இலக்கியங்கள் கங்கை கொண்ட சோழபுரத்தைக் குறிப் பிடுகின்றன. நகரைப் பற்றியும் மாளிகையைப் பற்றியும் பல குறிப்புகள் அவற்றில் காணப் படுகின்றன.

*அன்மையாய் விசும்பு பறந்தயன் தேட*
*அங்ஙனே பெரிய நீ சிறிய*
*என்னை ஆள்விரும்பி என் மனம் புகுந்த*
*எளிமையை யென்றும் நான் மறக்கேன்*
*முன்னம்மால் அறியா ஒருவனாம் இருவா*
*முக்கணா! நாற்பெருந் தடந்தோட்*
*கன்னலே! தேனே! அமுதமே! கங்கை*
*கொண்ட சோளேச் சரத்தானே*

– திருவிசைப்பா

மூன்றாம் இராசேந்திர சோழனுக்குப் பின்னர் சோழர் ஆட்சி வலுவிழந்தது. கங்கை கொண்டசோழபுரம் கோயிலில் சடையவர் மன்சுந்தர பாண்டியனது மூன்றாவது ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு உள்ளது. கி.பி. 1251ல் பட்டம் எய்தியவனிவன். பாண்டியப் பேரரசர் களிடையே சிறந்த வனாகத் திகழ்ந்தவன். இக் கோயிலில் 'சுந்தரபாண்டியன் சந்தி' என்ற வழிபாடு இவன் பெயரால் நடைபெற்று வந்துள்ளது. பின்னர் வந்த விக்கிரம பாண்டியனும் இக் கோயிலில் வழி பாட்டிற்காகத் தாமைளித் துள்ளான். கி.பி. 1261–இல் மாறவர்மன் குலசேகரன் ஆட்சியின் கீழ் கங்கை கொண்ட சோழபுரம் வந்தது.

விஜய நகர மன்னர்களான மல்லிகார்ஜீனன், பிரபுட விருபாட்சன் ஆகியோரது கல்வெட்டுகளும் இக் கோயிலில் காணப்படுகின்றன. கிருஷ்ண தேவராயர் காலத்தில் கங்கை கொண்ட சோழபுரம் கோயில் புகழுடன் விளங்கியிருக்கிறது. சோழமண்டலத்தில் பல கோயில்களுக்குச் சூலவரி போன்ற பல வரிகளிலிருந்து கிடைத்த பொருட்களைக் கிருஷ்ண தேவராயர் தானமாகக் கொடுத்துள்ளார். அவ்வாறு இவர் காலத்து வரி வசூலைத் தானமாகப் பெற்ற கோயில்களில் கங்கைகொண்ட சோழீச்சுரமும் ஒன்றாகும்.

17–ஆம் நூற்றாண்டில் பாளையக்காரர்கள் உடையார் பாளைத்தை ஆட்சி செய்து வந்தனர். இவர்கள் ஆட்சியின் கீழும் கங்கை கொண்ட சோழபுரம் சிறந்து விளங்கியது. இக்கோயிலுக்குப் பல திருப்பணி களையும் சிறப்பான வழி பாடுகளையும் செவ்வனே செய்து இவர்கள் இக்கோயிலைப் போற்றி வந்ததற் கானச் சான்றுகள் உள்ளன.

கி.பி. 1756இல் பிரெஞ்சுக்காரர்கள் உடையார் பாளையத் தின் மீது படையெடுத்தார்கள். அப்பொழுது 40, 000 ரூபாய் திறை செலுத்தப் பாளையக்காரர்கள் வற்புறுத்தப்பட்டார்கள். கி.பி. 1765–இல் ஆங்கிலேயர்களுடைய உதவியோடு நவாப் இவ்வூரைக் கைப்பற்றினார். இப்போரில் கங்கை கொண்ட சோழபுரம் பெரிதும் பாதிக்கப்பட்டது. கி.பி. 1801–ல் கிழக்கிந்திய கம்பெனியார்க்குத் திருச்சிராப்பள்ளிச் சீமை சொந்தமானது. அப்போது கங்கை கொண்ட சோழபுரமும் ஆங்கிலேயர் ஆட்சிக்கு உட்பட்டது.

# கங்கை கொண்ட சோழீச்சுரம்

முதலாம் இராசேந்திர சோழன் தான் கங்கைவரை பெற்ற வெற்றியின் நினைவாகக் கங்கை கொண்ட சோழபுரத்தை நிறுவி அங்குக் 'கங்கை கொண்ட சோழீச்சுரம்' என்ற கோயிலையும் எடுப்பித்தான் எனக் கண்டோம். கலையழகு மிக்க சிற்பங்களுடன் கூடிய ஒப்பற்றக் கோயில் இது!

இக்கோயிலை கங்கைகொண்ட சோழன் கட்டிய போதிலும், அவனது கல்வெட்டுகள் இதில் இல்லை. இராஜேந்திரனின் மூன்றாம் மகன் வீரராஜேந்திரனது. கல்வெட்டுதான் இக்கோயிலில் காணப்படும் கல்வெட்டுகளிலேயே தொன்மையானது. இது ஒரு மிகப்பெரிய கல்வெட்டாகும். சுமார் 216 வரிகள் கொண்டது. இந்தக் கல்வெட்டை இங்கு பொறிக்குபடி வீரராஜேந்திரன் ஆணையிட்டிருக்கிறான். அவன் காஞ்சிபுரத்திலிருந்து அரண்னையில் அமர்ந்திருந்தபோது இவ்வாணை யிட்டான் எனக் கல்வெட்டுக் கூறுகிறது.

இக்கல்வெட்டு வீரராஜேந்திரனின் கல்வெட்டான போதிலும் முதல் இராஜேந்திரன், முதல் ராஜாதிராஜன் ஆகியோரின் ஆணைகளையும் உள்ளடக்கிய கல்வெட்டாகும். இராஜேந்திர சோழன் தனது 23ம் ஆண்டில் கொடுத்த தானங்ளையும், இராஜாதிராஜன் தனது 26, 30–ம் ஆண்டுகளில் கொடுத்த தானங்களையும் குறிக்கிறது. ஆதலின் இக் கோயில் இராஜேந்திர சோழனின் 23–ம் ஆட்சி ஆண்டுக்கு (கி.பி.1035) முன்னர் கட்டப்பட்டது என்று தெளியலாம். இக்கோயிலுக்கு, இராஜேந்திர சோழனும், இராஜாதிராஜனும், வீரராஜேந்திரனும் வழிபாட்டுக்காக கொடுத்த பல ஊர்களை இக்கல்வெட்டு குறிக்கிறது. அந்த தானங்களே வீரராஜேந்திரனின் ஆட்சியில் கோயிலில் பொறிக்கப்பட்டன.

சோழ மண்டலத்து பல நாட்டுப் பிரிவுகளையும், அவற்றில் இருந்த ஊர்களையும், அந்த ஊர்கள் இந்த கோயிலுக்கு அளிக்கவேண்டிய

நெல்லையும் இது குறிக்கிறது. அதோடு அரசாங்க அதிகாரிகளாக யார் யார் பணிபுரிந்தார்கள்; அவர்களது பணிகள் என்ன என்பதையும் இக்கல்வெட்டுத் தெளிவாகக் கூறுகிறது.

இராஜேந்திர சோழனைக் குறிக்கும் போது ''பூர்வதேசமும், கங்கையும் கடாரமும் கொண்ட அய்யன்'' என்றும், இராஜாதிராஜனை ''கல்யாணபுரமும், கொல்லாபுரமும், கொண்டு யானைமேல் துஞ்சின அண்ணல்'' என்றும் குறிக்கிறது. வீரராஜேந்திரனின் ஆணையை திருமந்திர ஓலை என்ற பதவி வகுத்த அதிகாரி அரசன் சொல்ல எழுதினான். அவன் பெயர் பல்லவரையன் என்பதாகும். இவன் எழுதியதை மூன்று மேலதிகாரிகள் ஒப்பிட்டுப் பார்த்தனர். அவர்களது பதவி ''திருமந்திர ஓலை நாயகம்'' என்பதாம். வாணாதிராஜன், மதுராந்தக பிரும்மாதிராஜன், பல்லவரையன் என்பவர்கள் அவ்வாறு ஒப்பிட்டுப் பார்த்தனர். இவர்கள் தவிர மேலும் 64 அதிகாரிகள் இக்கல்வெட்டில் குறிக்கப் படுகின்றனர்.

இராஜேந்திரனின் தேவி, வானவன் மாதேவியையும், இராஜேந்திர சோழனின் மகள் அம்மங்கா தேவியையும் குறிக்கும் துண்டுக் கல்வெட்டுகளும் இங்கு உள்ளன. இந்தக் கோயிலுக்கு ஆண்டுதோறும் 1,03,893 கலத்துக்கும் மேல் நெல் அளக்கப்பட்டது. ஒரு குறிப்பிட்ட ஊர் மட்டும் 20,000 கலத்துக்கு மேல் நெல் அளந்தது.

முதல் குலோத்துங்க சோழன், பொத்தாலிமடத்து இராஜேந்திர சோழீச்சுரம் என்னும் கோயிலுக்கு சுங்கந் தவிர்த்த சோழ நல்லூர் என்னும் ஊரைத் தானமாகக் குடுத்தான். இந்த ஆணையைக் குலோத்துங்கன் கங்கைகொண்ட சோழபுரத்து, கங்கைகொண்ட சோழன் மாளிகையில் ஆதி பூமியில் கீழைச் சோபானத்து பள்ளிக்கட்டிலில் அமர்ந்திருந்த போது விடுத்தான் என்று கல்வெட்டுக் கூறும். கண்ணோஜியைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட காஹடவாலர் அரசர்கள் குலோத்துங்கசோழனுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார்கள் அவ்வரசர்களில் ஒருவருடைய கல்வெட்டு கங்கை கொண்ட சோழபுரம் கோயிலில் உள்ளது. குலோத்துங்கனுக்குப் பின்வந்த விக்கிரம சோழன், இரண்டாம் குலோத்துங்கன் இரண்டாம் இராஜராஜன் இரண்டாம் இராஜாதிராஜன், மூன்றாம் குலோத்துங்கன் ஆகிய மன்னர்கள் காலத்தில் கங்கைகொண்ட சோழப்புரம் புகழுடன் திகழ்ந்தது. பாண்டிய மன்னர்களில் ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் விக்ரம பாண்டியன், மாறவர்மன் குலசேகரன் ஆகியோர் இக் கோயிலில் வழிபாட்டுக்குத் தானம் கொடுத்திருக்கிறார்கள். 1463–ல் இருந்த வைப்பூர் திருவேங்கடமுடையான் ஏகாம்பர நாத காங்கேயன்

என்பவன் இங்கு ஒருமடத்துக்கு அளித்த தானத்தை ஒரு கல்வெட்டு குறிக்கிறது. காச்மீர தேசத்திலிருந்து வந்த 'காஷ்மீரராயன்' என்பவனும் இவ்வூர்க் கல்வெட்டில் குறிக்கப்படுகிறான்.

அண்மையில் விழுப்புரம் மாவட்டம் எசாலம் என்ற ஊரில் உள்ள இராமனாதேசுவரர் கோயிலில் திருப்பணி செய்யும் போது பூமிக்கடியிலிருந்து முதலாம் இராசேந்திர சோழனது செப்பேடு ஒன்று கிடைத்தது. இது இராசேந்திர சோழனின் 24–ஆம் ஆட்சி ஆண்டில் வெளியிடப்பட்டதாகும். இச்செப்பேட்டின் வட மொழிப் பகுதியில் முதலாம் இராசேந்திரனுக்குரிய அருஞ்செயலாகக் கங்கை கொண்ட சோழீச்சுரம் கோயில் கட்டிய செயல் குறிப்பிடப்படுகின்றது. எனவே கங்கை கொண்ட சோழபுரம் கோயிலை முதலாம் இராசேந்திரசோழன் கட்டினான் என்பது எசாலம் செப்பேட்டி னால் உறுதியாகிறது.

**கட்டடக்கலை**

இக்கோயில் தஞ்சாவூர் பெரியக்கோயிலைப் போன்றே காட்சி தரும். தஞ்சைக் கோயிலின் விமானம் அடித்தளத் திலிருந்து உச்சி வரை சதுர வடிவாகக் காட்சி தரும். ஆனால் கங்கை கொண்ட சோழபுரம் கோயிலின் விமானம் அடித்தளம் சதுரமாகவும், இடையில் எட்டு பட்டையாகவும், உச்சியில் வட்ட வடிவமாகவும் சிவலிங்கவடிவாகவே காட்சி அளிக்கும் பெருமை உடையது. தஞ்சை விமானத்தைப் போன்று அல்லாமல் இக்கோயில் விமானம் சற்றே உட்புறமாக வளைந்து பெண்மையின் நளினத்துடன் காட்சி அளிக்கிறது என்றால் மிகையில்லை!

தஞ்சைக் கோயிலில் கட்டடக் கலையின் சிறப்பில் அங்குள்ள சிற்பங்களின் அழகு நம் கருத்தைக் கவராமல் போய்விட்டது. ஆனால் கங்கை கொண்ட சோழபுரக் கோயிலின் சிற்பங்கள் தனிச் சிறப்புடன் கட்டடத்திலிருந்து வெளிப்பட்டுத் தனித் தன்மையுடன் காட்சி அளிக்கின்றன.

கோயிலில் கருவறை தஞ்சைக் கோயிலைப் போன்றே சுற்றி வலம் வரும் பாதையுடன் காட்சி தருகிறது. கருவறைக்கு முன் இடைநாழி மற்றும் முன் மண்டபம் என்ற அமைப்புடன் விளங்குகிறது. கருவறைக்கு முன்னர் உள்ள மண்டபம் இரண்டு அடுக்கு உள்ள மிகப் பெரிய மண்டபமாகத் திகழ்ந்திருத்தல் வேண்டும். முன்மண்டப வாயில் மற்றும் இடைநாழியில் வாயிலில் நிற்கும் வாயிற் காவலர்களின் சிற்பங்கள் தஞ்சைக் கோயிலில் இருப்பது போன்றே மிகவும் பெரிய வடிவம் கொண்டவையாகும்.

இக்கோயிலின் திருச்சுற்று மாளிகை இரண்டு தளங்களை உடையதாக இருந்திருக்கிறது. தற்பொழுது சில இடங்களில் மட்டுமே இத்தகையஅடுக்கு காணப் படுகிறது. கிழக்கு நோக்கிய கோயிலில் கோயிலின் எதிரே சுதையால் ஆன நந்தி காணப்படுகிறது. இதனை அடுத்துக் கிழக்கு வாயிலில் காணப்படும் கோபுரம் அண்மையில் மத்திய தொல்பொருள் ஆய்வுத் துறையால் பழுது பார்க்கும் பணி மேற் கொள்ளப்பட்டுப் புதிய பொலிவுடன் காட்சி தருகிறது. திருச்சுற்றில் வட புறத்திலும், தென் புறத்திலும் சிறு சிறு கோயில்கள் காணப்படுகின்றன. இவை வட கயிலாயம், தென்கயி லாயம் என வழங்கப்பெறுகின்றன. வட கயிலாயம் பெரிய நாயகி அம்மன் சன்னதியாகத் திகழ்கிறது.

கி.பி. 1755 முதல் 1801 வரை பிரெஞ்சுக்காரர்கள், நவாப், ஆங்கிலேயர் ஆகியோரின் ஆதிக்கப் போராட்டத்தின் போது இக்கோயிலும் நகரமும் படைத் தளமாகியது. கோயிலின் வெளிப்புறத்தில் காணப்படும் கோட்டை மதில் இக்காலத்தில் கட்டப்பட்டிருக்க வேண்டும்.

கி.பி.1836–இல் கொள்ளிடம் ஆற்றின் கீழ் அணை கட்டுவதற்காக இக்கோயிலின் திருச்சுற்று மாளிகைப் பகுதிக் கற்களெல்லாம் எடுத்துச் செல்லப் பட்டன. இதைப்பற்றிய குறிப்பு 1855–ஆம் ஆண்டின் இந்தியன் ஆண்டிக்வரி என்ற நூலில் காணப்படுகிறது.

**சிற்பங்கள்**

கருவறையின் தேவகோட்டங்களில் நடனமிடும் கணபதி, தட்சிணாமூர்த்தி, அரியரன், ஆடவல்லான், கங்காதரர், லிங்கோத்பவர், திருமால், சுப்ரமணியர், காலாந் தகர், துர்க்கை, பிரம்மா, பைரவர், காமதகனர், சண்டேச அனுக் கிரகமூர்த்தி, கலைமகள் ஆகிய தெய்வ திருவுருவங்களைக் கண்டு மிகழலாம்.

இவற்றில் ஆடவல்லான் சிற்பம் மிகவும் அற்புத வடிவமுடையது. சோழ மன்னர்களின் குலநாயகம் ஆடவல்லான் ஆயிற்றே! ஆனந்தத்தாண்டவம் ஆடும் ஆடவல்லான் அருகில் உமை அன்னை நந்தியின் மேல் கையை ஊன்றி இறைவனின் தாண்டவத்தைக் கண்டுலயித்து நிற்கிறார். மறுபக்கம் குடமுழா வாசிக்கும் நந்தியின் உருவம். ஆடவல்லான் காலடியிலே சிவகணங்கள். அவை மட்டுமா! எலும்பும் தோலுமாய்ப் பக்தியே உருவாகக் காரைக்கால் அம்மையார் தாளம் இடும் காட்சியைக் கண்டு போற்றாதவர்கள் யாருமே இருக்க முடியாது. "நீ ஆடும் போது உன்னடியின் கீழ் இருக்க வேண்டும்" என

இறைவனை வேண்டுகிறார் எனச் சேக்கிழார் பெருமான் காரைக்கால் அம்மையாரின் வரலாற்றிலே கூறுகிறார். இலக்கியம் உயிர் பெற்று திகழ்வதை இச்சிற்பத்திலே காணலாம்.

வடக்குப் பக்கத்தில் சண்டேச அனுக்கிரகமூர்த்தி சிற்பம் அழகு செய்கிறது. சிவபெருமான் உமையுடன் அமர்ந்திருக்கிறார். அவரது காலடியில் கரம் கூப்பி வணங்கிய நிலையில் அமர்ந்துள்ள சண்டிகேசுவரர். சிவபெருமான் ஆசையோடும் மகிழ்ச்சியோடும் சண்டிகேசுவரர்க்குக் கொன்றை மாலையைச் சூட்டுகிறார். உமையன்னை பெருமிதத்தோடு அக்காட்சியைக் காணும் காட்சி அற்புதமானது. இங்குள்ள சண்டிகேசுவரரை இராஜேந்திரனே தன்னை உருவகம் செய்து கொண்டு அமைத்திருப்பானே எனப் பல அறிஞர்கள் கருதுகின்றனர். தமிழகத்தில் இத்தகைய கலை அழகு வாய்ந்த சிற்பம் இக்கோயிலில் மட்டும் தான் உள்ளது. இச்சிற்பத்தின் எதிரே காணப் படும் ஞான சரசுவதியின் சிற்பமும் மிக அழகு வாய்ந்தது.

கங்கைகொண்ட சோழபுரக் கோயிலில் உள்ள சிற்பங்களில் சில சோழமன்னர்களின் வெற்றியின் போது கொண்டு வரப்பட்டு இங்கே வழிபடப் பெறுகின்றன. சிம்மக்கேணிக்கு அருகில் உள்ள மகிஷாசுரமர்த்தினி, நவக்கிரகம் என்று வணங்கப் பெறும் சூரிய பீடம், துர்க்கை ஆகியவை சாளுக்கிய நாட்டைச் சேர்ந்தவை. கருவறைக்குள் நுழையும் இடத்தில் உள்ள கலைமகள் பாலர் கலைப்பாணியைச் சேர்ந்தது. இவையன்றிக் கங்கை கொண்ட சோழபுரத்தைச் சுற்றியுள்ள பல கிராமங்களில் சாளுக்கிய, நுளம்பர் நாட்டுச் சிற்பங்கள் வழிபாட்டில் உள்ளன.

**செப்புத்திருமேனிகள்**

கங்கைகொண்ட சோழபுரம் கோயிலில் இராசேந்திர சோழனால் வழிபடப்பெற்ற முருகன், சோமாஸ்கந்தர், அதிகாரநந்தி போன்ற கலை நய மிக்க செப்புத்திரு மேனிகள் வழிபாட்டில் உள்ளன.

# கங்கை கொண்ட சோழபுரம்

**ஊரும் மாளிகையும்**

சோழ மன்னர்கள் வாழ்ந்த ஊர் மற்றும் மாளிகை எவ்வாறு இருந்திருக்க வேண்டும் என்பதை அறிந்து கொள்ள இலக்கியங்களும் – கல்வெட்டுகளும் துணை புரிகின்றன.

கங்கை கொண்ட சோழபுரத்தைச் சுற்றி மதிற்சுவர்கள் இருந்திருக்கின்றன. கலிங்கத்துப்பரணி யில் 'கங்காபுரியின் மதிற்புறத்துக் கருதார் சிரம் போய் மிக வீழ' என்று குறிப்பிடப் படுகிறது. ஒட்டக்கூத்தர் இயற்றிய மூவருலாவில் இந்நகரைப் பற்றிக் கூறப் பட்டுள்ளது.

*கோயிலுரிமைக் குழாம் நெருங்கி – வாயிலும்*
*மாளிகையும் சாலையும் ஆலயமும் மண்டபமும்*
*தூளிகையும் எம்மருங்குந் தோரணமும் – சாளரமுந்*
*தெற்றியும் மாடமும் ஆடரங்கும் செய்குன்றும்*
*சுற்றிய பாங்கரும் தோன்றாமே*

– இராசராச சோழனுலா 157–162

**விக்கிரமாங்க தேவ சரிதம் :**

வடமொழியில் பில்கணரால் கி.பி. 12ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட இவ்விலக்கியத்தில் கங்கை கொண்டசோழபுரம் பற்றிய குறிப்புகள் உள்ளன. இவ்வூர் கல்வி மற்றும் செல்வத்தில் சிறந்து விளங்கிறது என்றும், மேலும் மாட மாளிகைக் கொண்டுள்ளது என்றும், இவ்வூர் திருமகளின் இருப்பிடம், என்றும் குறிப்பிட்டு 'கங்ககுண்டம்' என்று கங்கைகொண்ட சோழபுரத்தைக் குறித்துள்ளார்.

ஊரைச் சுற்றி இரண்டு கோட்டை மதில்களாவது இருந்திருக்க வேண்டும். இராசேந்திர சோழன் மதில், உள்படை வீட்டு மதில் என்ற பெயர்கள் கல்வெட்டுகளில் குறிப்பிடப் படுகின்றன.

குலோத்துங்கச் சோழன் கல்வெட்டில், 'குலோத்துங்கச் சோழன் திருமதில்' என்ற பெயரும், குலோத்துங்கச் சோழன் திருமதில் பெருவழி என்ற ஒரு தெருவின் பெயரும் குறிப்பிடப்படுகின்றன.

இவ்வூரில் பல வழிகள் இருந்திருக்கின்றன. அவைகளுக்கு பெயர்களும் இடப்பட்டிருந்தன என்பதை அறிகிறோம். இராஜராஜன் பெருவழி, இராசேந்திரன் பெருவழி, விலாங் குடையான் பெரு வழி, கூழையானை போன பெருவழி என்ற பெயருடைய வழிகளின் பெயர்கள் கல்வெட்டுகளில் காணப் படுகின்றன. குலோத்துங்க சோழனின் கல்வெட்டு 'தரணி சிந்தாமணி பெருந்தெரு' என்ற ஒரு தெருவின் பெயரைக் குறிப்பிடுகிறது. திருவாசல் நரசம், சுத்தமல்லி நரசம் ஆகிய சிறு தெருக்களும் இருந்திருக்கின்றன. இரண்டாம் இராசேந்திரன் கல்வெட்டில் கங்கை கொண்ட சோழபுரத்து உள்ளாலை பெரிய அங்காடி, திருபுவனமாதேவிப் பேரங்காடி என்ற இரு அங்காடிகள் குறிப்பிடப்படுகின்றன. வேம்புகுடி வாசல் என்ற பெயர்கொண்ட வாயில் ஊரின் தெற்குப் புறத்தில் இருந்ததாக அறியப்படுகிறது. இன்றும் வேம்புக்குடி என்ற ஊர் கங்கை கொண்ட சோழபுரம் அருகே உள்ளது.

**மாளிகை**

சோழ மன்னர்களில் பெரும்பாலானோர் கங்கை கொண்ட சோழபுரத்து மாளிகையில் இருந்து கொண்டு ஆட்சி செய்திருக்கின்றனர். அம்மாளிகையைப் பற்றிக் கல்வெட்டு களால் அறிய முடிகிறது.

*''வண்புயலைக் கீழ்ப்படுத்து வானத் தருமலைந்து*
*மண் குளிரச் சாயல் வளர்க்கு மாந் — தண் கவிகை*
*கொங்காரலங்கலன பாயன் கோய் பொழில் சூழ்*
*கங்காபுர மாளிகை''*

என்ற தண்டியலங்காரப் பாடல் கங்கை கொண்ட சோழபுர மாளிகையைச் சிறப்பித்துக் கூறுகிறது.

வீரராசேந்திரனுடைய கல்வெட்டில் இங்கிருந்த அரண்மனையின் பெயர் 'சோழ கேரளன் திருமாளிகை' எனக் குறிக்கப்படுகிறது. 'சோழ கேரளன்' என்பது இராசேந்திரசோழனுடைய பட்டப் பெயர்களில் ஒன்றாகும். முதற் குலோத்துங்க சோழனுடைய கல்வெட்டு ஒன்று இங்கிருந்த மாளிகையைக் கங்கை கொண்ட சோழன் மாளிகை எனக் குறிக்கிறது. மாளிகை வெவ்வேறு மன்னர்கள் காலத்தில் மாற்றி அமைக்கப் பட்டு

வெவ்வேறு பெயரால் அழைக்கப் பட்டிருத்தல் வேண்டும். 'மாளிகைமேடு' எனக் கூறப்படும் இடத்தில் மேற்கொள்ளப் பட்ட அகழாய்வில் வெளிப்படுத்தப் பட்ட கட்டடங்களில் வெவ்வேறு காலக் கட்டடப்பகுதிகள் காணப்படுவதிலிருந்தும் முதலில் இருந்த மாளிகை பிற்காலத்தில் மாற்றிக் கட்டப்பட்டது என்பது உறுதியாகிறது.

மாளிகையின் பகுதிகளைப் பற்றியும் சில கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. ஒரு கல்வெட்டில் ஆதி பூமி, கீழைச் சோபானம், மாவலிவாணாதராஜன் பள்ளிக்கட்டில் போன்ற பகுதிகள் குறிப்பிடப்படுகின்றன. வேறு ஊர்களில் உள்ள கல்வெட்டுக்களிலும் கங்கை கொண்டசோழபுரத்தில் இருந்த மாளிகையைப் பற்றிக் கூறப்படுவதைக் காணலாம். இராஜாதிராஜனுடைய கல்வெட்டு ஒன்றில் அவன் கங்கை கொண்ட சோழபுரம் அரண்மனையில் 'வெளிமேல் மண்டபம்' என்ற இடத்தில் 'பல்லவராயன்' என்ற இருக்கையின் மீது உட்கார்ந்திருந்த பொழுது சர்வதீர்த்த உடையார் என்ற இறைவனுக்கு இறையிலியாக நிலம் அளித்த செய்தி கூறப்படுகிறது. இதே மன்னன் இம்மாளிகையில் இருந்து கொண்டு திருவெண்காடு தலத்தில் உள்ள அர்த்தநாரி இறைவனுக்கு நிலம் தானமாக அளித்த செய்தி மற்றொரு கல்வெட்டால் அறிய முடிகிறது.

### கங்கை கொண்ட சோழபுரத்தைச் சேர்ந்தோர்

கங்கை கொண்ட சோழபுரத்து உடையான் செய்ய பாதம் என்பவன் திருவாரூர்க் கோயிலில் உடையார் வீதி விடங்கத் தேவர் நம்பிராட்டியார்க்கு ஒரு இரத்தின ஆரம் செய்தளித்ததாக இரண்டாம் இராசேந்திரசோழனின் கல்வெட்டால் அறியமுடிகிறது.

நன்னிலம் வட்டம் சேங்காலிபுரத்தில் துந்து பீசுவரசுவாமி கோயில் உள்ளது. அக்கோயிலைக் கற்றளியாகச் செய்தவன் கங்கை கொண்ட சோழ புரத்தைச் சேர்ந்த சாலிகன் கௌதமன் ஆவான். அக்கோயிலின் சுவரில் கூப்பிய கரத்துடன் இவனது உருவமும் அவ்வுருவத்திற்கு மேலே 'ஸ்வஸ்திஸ்ரீ இக்கோயில் திருக்கற்றளித் திருப்பணி செய்வித்தான் கங்கை கொண்ட சோழபுரத்து முடிகொண்ட சோழப் பெருந்தெருவில் இருக்கும் சாலிகன் கௌதமன் தில்லை வனமுடையான் அரியான். என்று கல்வெட்டும் காணப்படுகிறது. சீர்காழிக் கோயிலில் உள்ள கல்வெட்டு ஒன்றில் இவ்வூரைச் சேர்ந்த வாம மாளிகை உடையான் வேம்பன் வைபிரியார் மகன் ஆரம் பூண்டான் என்பவனைப் பற்றிக் கூறுகிறது. கங்கை கொண்ட சோழபுரத்து அரண் மனையில் திருமஞ்சனம் ஆட்டும்

பணி மகளிரில் ஒருத்தி நாட்டாமை என்னும் பெயருடையாள் பொன் தானமளித் துள்ளாள் எனச் சிவபுரிக் கல்வெட்டுக் கூறுகிறது. எனவே, கங்கை கொண்ட சோழபுரத்தைச் சார்ந்தோர் பல்வேறு கோயில் களுக்கும் தானங்கள் அளித்துள்ளனர் என அறிகிறோம்.

**சோழகங்கம்**

கங்கை கொண்ட சோழபுரத்திலிருந்து மேற்கே செயங்கொண்டம் செல்லும் சாலையில் சுமார் 2கி.மீ தொலைவில் ஒரு பெரிய ஏரியைக் காணலாம். தற் பொழுது இவ்வேரி 'பொன்னேரி' என அழைக்கப் படுகிறது. இராசேந்திர சோழன் தான் வெற்றி கொண்ட அரசர்களின் தலையில் கங்கை ஆற்றின் நீரை எடுத்து வரச் செய்து அதை இங்குச் 'சோழகங்கம்' என்றும், ஜலஸ்தம்பமாகச் (வெற்றித்தூண்) செய்வித்தான் எனத் திருவாலங்காட்டுச் செப்பேடு வரலாற்றுச் சிறப்பினை எடுத்துக் கூறுகிறது. இப்பகுதியின் வேளாண்மைக்கு 'பொன்னேரி' பெரிதும் உதவியாக அமைந்துள்ளது.

# கங்கை கொண்ட சோழபுரம் அகழாய்வு

தமிழக வரலாற்றில் பல முக்கிய அரசியல் நிகழ்வுகள் நடைபெற்ற இடமாக திகழ்ந்த இந்நகர் தற்போது ஒரு சிறிய கிராமமாக காணப்படுகிறது. கங்கைகொண்ட சோழபுரத்தைச் சுற்றிலும் சுமார் மூன்று கி.மீ. சுற்றளவில் அமைந்துள்ள ஊர்கள் யாவும் வரலாற்றுச் சிறப்புடன் கூடிய பெயர்களைக் கொண் டுள்ளன. அவை

1. உள்கோட்டை, 2. சுண்ணாம்புக்குழி, 3. மாளிகை மேடு, 4. ஆயுதகளம், 5. செங்கல்மேடு, 6. மெய்காவல் புத்தூர், 7. வீர சோழபுரம், 8. வாண தரையன் குப்பம், 9. கொல்லாபுரம், 10.வானவன் நல்லூர், 11. குயவன் பேட்டை 12. தொட்டிகுளம், 13.கணக்கு வினாயகர் கோயில், 14. பொன்னேரி, 15. மண்மலை, 16.பாகல் மேடு, 17. தேர்மேடு, 18. செம்மேடு, 19. கருங் காட்டுஓடை, 20. குருவாலப்பர் கோயில், 21. கடாரங் கொண்டான், 22. அழகர் கோயில் போன்றவையாகும். இவையனைத்தும் பண்டைக்காலத்தில் ஒரே நகரின் பகுதிகளாக அமைந்திருந்தன. சோழர் காலத்திய கோட்டையும், அரண்மனையும் எவ்வளவு பரப்பளவிற்கு சென்னைத் தரமணியில் உள்ள நீர் ஆய்வு நிறுவனத்தில் விண்கலம் மூலம் எடுக்கப் பெற்று பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ள ஒளிப்படங்கள் ஆய்வு செய்யப்பட்டன. அவ்வாறு ஆய்வு செய்யப்பட்டதில் இவ்வரண்மனையின் பரப்பு சுமார் ஒரு சதுர மைல் அளவிற்குச் சதுரமாக இருப்பது கண்டறியப்பட்டது.

**அகழாய்வு :**

இத்தகைய வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த கங்கை கொண்ட சோழபுரம் பகுதியில் தமிழ்நாடு அரசுத் தொல்லியல் துறையால் 1980, 1981, 1985, 1987 மற்றும் 1991 ஆகிய ஆண்டுகளில் மாளிகைமேடு, மண்மலை,

கல்குளம், குருவாலப்பர் கோயில், பொன்னேரி ஆகிய வெவ்வேறு இடங்களில் மொத்தம் 31 அகழ்வுக் குழிகள் அகழப்பட்டன. இதன் மூலம் சோழர் கால மாளிகையின் கட்டிடக்கலை அமைப்பு, அக்கால மக்களின் வாழ்க்கை நிலை ஆகியவைப் பற்றித் தெளிவாக அறிய முடிகிறது.

**மாளிகை மேடு :**

கங்கை கொண்ட சோழபுரத்திலிருந்து தென் மேற்கே சுமார் 2 கி.மீ. தூரத்தில், குருவாலப்பர் கோயிலிருந்து உள்கோட்டைக்குச் செல்லும் வழியில் உள்ள மேட்டுப் பகுதி மாளிகைமேடு என அழைக்கப் படுகிறது. இவ்விடத்தில் மொத்தம் 24 அகழ்வுக் குழிகள், ஒரு குழி 4 X 4 மீட்டர் என்ற அளவில் அகழப்பட்டன. இதில் சோழர்கால அரண் மனையின் அழிந்த சுவர்ப்பகுதிகள் கண்டு பிடிக்கப்பட் டுள்ளன. இவை மூன்று காலக்கட்டடங்களைச் சேர்ந்தவை என்பது அகழாய்வின் மூலம் தெரிய வந்தது. அவை இராஜேந்தி சோழன் காலத்துக்கு முன் பிருந்த கட்டடப் பகுதி இராசேந்திரன் காலத்திய கட்டடப்பகுதி, அவனுக்குப் பின்பு ஏற்பட்ட கட்டடப்பகுதி என்பவையாகும்.

இராசேந்திர சோழன் காலத்துக்கு முன்னதாகக் கருதப் படும் கட்டடப்பகுதியின் முழுப்பகுதியும் நமக்குக் கிடைக்கவில்லை. சிறு பகுதிதான் நமக்குத் தெரியவந்துள்ளது. ஆதலால் அக்கட்டடத்தின் அமைப்பு எவ்வாறு இருந்தது எனக் கூற இயலாது. ஆனால் இராசேந்திரசோழன் காலத்துக் கட்டடப் பகுதியில் பெரும்பகுதி வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது. அவ்வாறு வெளிப்படுத்தப் பட்டிருகின்ற பகுதியை வைத்துப் பார்க்கையில் ஒன்றன் பக்கத்தில் ஒன்றாக இரு சுவர்கள் ஒவ்வொரு பகுதியிலும் எழுப்பப் பட்டு இருப்பது தெரிய வருகிறது. இந்த இரு சுவர்களுக்கும் இடையில் 55 செ.மீ அளவு இடைவெளி விடப்பட்டு இருக்கிறது. இவ்விடைவெளி ஆற்று மணலால் நிரப்பப் பட்டுக் காட்சி தருகிறது. ஒவ்வொரு சுவரின் அகலமும் 1.10 மீட்டர் உடையது. இச்சுவர்கள் தரைப்பகுதியில் இருந்து 1.65 மீட்டர் ஆழத்தில் கிடைத்துள்ளன. தற்போது கையாளப்பட்டு வரும் முறையான குறுக்காகவும் நெடுக்காகவும் (Header and Stretcher) கற்கள் அடுக்கும் முறையே அக்கட்டடத்தில் பயன்படுத்தப்பட்டிருப்பது அறிய முடிகிறது. இந்த கட்டுமான முறை கட்டடத்திற்கு உறுதியை அளிக்கக் கூடியது மட்டு மின்றி கட்டடத்தில் விரிசல் ஏற்படாத வாறு த(டு)க்கும் வல்லமை உடையது. ஒரு கல் வரிசைக்கும் மற்றொரு கல்வரிசைக்கும் இடையில் பிடிப்பு சாந்தாகக் (Binding material) களி மண் பயன் படுத்தப்பட்டுள்ளது.

இச்சுவர்களின் மேற்பகுதியில் சுண்ணாம்புச் சாந்து பூசப்பட்டிருக்கிறது. அச்சாந்தின் கனம் 4 செ.மீட்டர் ஆகும். ஒவ்வொரு சுவரும் மொத்தம் 37 செங்கல் வரிசைகளை உடையதாகக் காணப்படுகிறது. கீழ்மட்டத்தில் இருந்து ஒரு நிலை வரை 23 வரிசைகளும் (அகலம் 1.28 மீ) அதற்கு மேல் 14 வரிசைகளும் (அகலம் 1.10மீ) காணப்படுகின்றன. மேல் இருந்து 15வது வரிசையினுடைய அகலம் பக்கத்துக்கு 9 செ.மீ. அதிகமாகக் காணப்படுகிறது. இறுதிக் கல்வரிசையின் கீழ் ஆற்று மணல் பரப்பப் பட்டுள்ளது. இந்த சுவரில் உள்ள ஒவ்வொரு செங்கல்லும் 24.5X12.5X0.6 செ.மீ அளவில் உயரம், அகலம், கனம் ஆகியவற்றைப் பெற்றிருக்கிறது. ஒவ்வொரு சுவரின் மேல் பகுதியிலும் 2 மீட்டர் இடைவெளி விட்டு சதுர வடிவில் கருங்கல் அமைக்கப் பட்டுள்ளன. அவ்வாறு அமைக்கப்பெற்ற கற்கள் இதுவரை 32 கிடைத்துள்ளன. இவற்றைப் பார்க்கையில் இக்கருங்கற்கள் தூண்களைத் தாங்கும் பீடங்களாக இருந்திருக்கலாம் என்று கருத முடிகிறது. ஒவ்வொரு கருங்கல்லும் 62X60X30 செ.மீ. அளவில் உள்ளது. ஒன்றையடுத்து ஒன்றாகச் செல்லும் இரு சுவர்கள் மற்றும் இக்கருங்கற்களையும் பார்கையில் இராசேந்திர சோழன் எழுப்பிய இக்கட்டடம் பல தளங்கள்பெற்று விளங்கியிருக்கலாம் என்று உணர முடிகிறது. கட்டடத்தின் உள்பகுதி தூண்கள் நிரம்பிய பெரிய கூடமாக இருந்திருக்கலாம். மேலும் இக்கருங் கற்களுக்கு அருகில் 2.20 மீ ஆழத்தில் 30 செ.மீ தடிப்பில் மரத்தூணின் அழிந்த படிவம் கிடைத்தது. எனவே, இம் மண்டபத்தைத் தாங்குவதற்கு மரத்தூண்களைப் பயன்படுத் தியுள்ளனர் எனத் தெரிகிறது.

ஒன்றையடுத்து ஒன்றாக இரு சுவர்கள் அமைக்கப்பட்டதன் காரணம், இரு சுவர்களுக்கும் இடையில் காணப்படும் ஆற்று மணலைக் கொண்டு பார்த்தால், ஒருவேளை கட்டடம் குளிர்ச்சியுடன் இருக்க வேண்டும் என்ற நோக்கத்திலும், தளங்களையுடைய பகுதியாக மேல்பகுதி இருந்ததால் அதைத் தாங்கக் கூடிய வகையில் வலுவான அடித்தளச் சுவர்கள் வேண்டும் என்ற நோக்கத்திலும் அமைந்திருக்க வேண்டும் என்று கருதலாம். இராசேந்திரசோழன் காலத்தில் எழுப்பப்பட்ட கங்கை கொண்ட சோழீச்சுரம் ஆலயத்தின் கருவறைப் பகுதியில் இரு சுவர்கள் ஒன்றையடுத்து ஒன்றாக எழுப்பப்பெற்று ஒரு நிலை வரை தனித்துச் சென்று பின்னர் ஒன்றாகச் சேருகின்றன. அதன் மீது விமானப் பகுதி அமைக்கப் பட்டிருக்கிறது. மேலே தளங்கள உடைய கணமான மேல் பகுதியைத் தாங்குவதற்காக இரு சுவர்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன என்று கருதமுடிகிறது. முதலாம் இராசராசன் எழுப்பிய தஞ்சைப் பெருவுடையார்

கோயிலிலும் இரு சுவர் அமைப்பை ஏற்படுத்தி இருப்பது நினைக்கத் தக்கது. இராசேந்திர சோழன் காலத்தியக் கட்டடத்தில் ஒரு பகுதியில் சுவர் களில் பெருக்கல் குறி போன்று போடப்பட்டுக் காணப் படுகிறது. இக்குறிகள் பெரும்பாலும் சுவர் எழுப்பிய கொத்தனார்களால் போடப்பட்டிருக்கலாம் (Mason mark) என்று கருதமுடிகிறது. ஒரு குறிப்பிட்ட அளவைக் குறித்துக் கொள்வதற்காக இத்தகைய குறியீடுகள் இடப்பட்டிருக்கலாம் என்று உணர முடிகிறது.

இராசேந்திர சோழன் காலத்திற்குப் பிறகு எழுப்பப் பட்ட கட்டடம் ஒன்றும் அகழாய்வில் தெரியவந்துள்ளது. இக் கட்டடப் பகுதி தரைப் பகுதியில் இருந்து சுமார் 45 செ.மீ. ஆழத்திலும், இராசேந்திர சோழன் காலத்துக்கு கட்டடப் பகுதியிலிருந்து சுமார் 30 செ. மீ. க்கு மேலேயும் காணப் படுகிறது. இதிலிருந்து இக் கட்டடம். இராசேந்திர சோழன் காலத்திற்குப் பிற்பட்ட தாகவும், சுமார் கி.பி. 12–14 ஆம் நூற்றாண்டுகளில் அமைக்கப்பட்டிருக்கலாம் என்றும் கருத முடிகிறது. இராசேந்திரன் காலக் கட்டடப் பகுதியை வெளிப் படுத்திய போது இங்குச் சில வண்ணம் பூசப்பட்ட காரைப் பகுதிகள் கிடைத்துள்ளன. இவற்றைக் கொண்டு பார்க்கும் போது இராசேந்திரனது மாளிகைச் சுவர்களின் உட்புறத்திலும் வெளிப்புறத்திலும் வண்ணம் ஓவியங்கள் தீட்டப்பட்டு அழகு மாளிகை யாக அது விளங்கியிருக்கலாம் என்று அறிய முடிகிறது.

இங்குப் பல அடுக்குகள் கொண்ட கட்டடம் இருந்தது என்பதற்கு அகழாய்வில் கிடைத்த உடைந்த மேல் தளக் கூரை அமைப்புப் பகுதிகள் சிறந்த சான்றாக அமைகின்றன. இவற்றின் இருபுறமும் சுண்ணாம்பும் மணலும் கலந்த பூச்சுக் காணப்படுகிறது. அடுத்து இவற்றின் நடுவில் சிறிய அளவிலான செங்கற்களைக் கிடை மட்டமாக அமைத்து அதன் மீத சுண்ணாம்பு பூச்சு செய்யப்பட்டுள்ளது. இதன் மேல் கூரை ஓடுகள் வரிசையாக பதியப்பட்டுள்ளன. இதன் மூலம் கட்டட அடிச் சுவரின் மீத மரம் அல்லத கல் தூண்களை நிறுத்தி, இத்தூண்களின் மேல் மர உத்திரங்கள் மற்றும் மரச் சட்டங்களைப் பொருத்தி, அவற்றை இரும்பு ஆணிகளைக் கொண்டு இணைத்து, அவற்றின் மிது சுண்ணாம்பு மணல் கலந்த கலவையுடன் சிறிய செங்கற்களைக் கிடைமட்டமாக அமைத்து அதன் மீது தட்டையான கூரை ஓடுகள் பாவப்பட்ட கூரை பகுதி (Roof) அமைக்கப்பட்டது எனத் தெரிகிறது.

அடித்தளச் சுவர்களுக்கு இடைப்பட்ட பகுதியில் உடைந்த செங்கற் துண்டுகளையும், கடினமான மண்ணையும் கலந்து அப்பகுதியை

நிறைத்துக் கெட்டிப்படுத்தியுள்ளனர் பின்னர் இதே போன்று அடித்தள சுவர்களின் மேல் மட்டம் வரை, அதாவது சுவர்களுக்கிடையில் கருங்கல் பீடங்கள் பதிக்கப்பட் டுள்ள நிலை வரையில், நிரப்பிக் கெட்டிபடுத்தி அதன் மிது நன்கு சலிக்கப்பட்ட மஞ்சள் நிற மணல் கலந்த கெட்டியான களிமண் கலவைவைச் சமமாகப் பரப்பி, அதன் மேல் பகுதியில் சுண்ணாம்புக் காரையைப்பூசி அழகிய தரைப் பகுதியை (Flooring) உருவாக்கியுள்ளனர்.

**மண்மலை :**

கங்கை கொண்ட சோழபுரம் – அணைக்கரை சாலையில் சுமார் 3 கி.மீ. தூரத்தில் சாலையின் அருகே மண் மலை என்ற கிராமம் உள்ளது. இவ்வூரில் சிறிய மண்மேடு ஒன்று காணப்படுகிறது. இந்த இடத்தின் வரலாற்றுத் தொண்மை யினை அறிந்துக்கொள்வதற் காக இரு அகழ்வுக் குழிகள் தோண்டப்பட்டன. முதற்குழியில் 3.90 மீட்டர் ஆழத்தில் செங்கற்கள் பாவப்பட்டது போன்ற அமைப்பு காணப்பட்டது. இது கட்டடத்தின் ஒரு பகுதியாக இருக்கக் கூடும். இது போன்ற கட்டப்பகுதி மற்றொரு குழியில் 2.70 மீ அழ்த்திலும் காணப்பட்டது.

இங்கு காணப்பட்ட கட்டப்பகுதியைக்காணும் பொழுது இங்கும் ஓர் உயர்ந்த கட்டடம் இருந்திருக்க வேண்டும் எனக் கருத முடிகிறது. இங்குள்ள சுவரின் அகலம் 1.10 மீட்டர். இது மாளிகைமேடு அகழாய்வில் காணப்பட்ட சுவரின் அளவே உள்ளது. எனவே, மண்மலை, மாளிகைமேடு சுவர்கள் ஒரே காலத்தலை என்பதும், கங்கை கொண்ட சோழபுரம் நகர் மண்மலை வரை (தற்போது மாளிகை மேட்டிலிருந்து 3 கி.மீ. தூரம்) விரிவடைந்திருந்தது என்பதையும் அறிய முடிகிறது.

**கோட்டை மதில் சுவர் (குருவாலப்பர் கோயில்)**

கங்கைகொண்ட சோழபுர நகரைச் சுற்றி மதில் சுவர் அமைந்திருக்க வேண்டும். குருவாலப்பர் கோயில் என்னும் ஊரிலிருந்து உள்கோட்டை செல்லும் சாலையின் துவக்கத்தில் இடது புறத்தில் காணப்படும் வயல்களுக்கு அருகில் நீளமான மேடு காணப்படுகிறது. இதனை ஊர் மக்கள் அகழிமேடு என அழைக்கின்றனர். இப்பகுதியைப் பற்றியும் அறிந்துக்கொள்ள இங்கு இரண்டு அகழ்வுக் குழிகளில் அகழாய்வு மேற்கொள்ளப் பட்டது இதில் 50 செ.மீ. ஆழத்தில் செம்புராங் கற்கள் (Laterite stones) எனப்படும் ஒரு வகைக் கற்களைச் சீராக அடுக்கிக் கட்டிய சுவர் அமைப்பு ஒன்று காணப்பட்டது. கிழக்கு மேற்காக இச்சுவர் அமைப்புத் தொடர்ந்து செல்கிறது. இது சோழர் காலத்தில் கட்டப்பட்ட

வெளிப் புறக் கோட்டை மதில் சுவராக இருத்தல் வேண்டும். இதனைக் கல்வெட்டுகள் 'இராசேந்திர சோழன் மதில்' என அழைக்கின்றன.

**கல்குளம் :**

மாளிகைமேடு எனப்படும் இடத்தின் அருகே குளம் ஒன்று உள்ளது. இதனைக் கல்குளம் என மக்கள் அழைக் கின்றனர். இக் குளத்தின் வடக்குப் பக்கத்தில் இரண்டு அகழாய்வுக் குழிகள் தோண்டப்பட்டன. இதில் 2 மீட்டர் ஆழத்தில் கருங்கற்களைக் கொண்டு அமைத்த கால்வாய் ஒன்று காணப்பட்டது. கால்வாயின் மேற் பகுதி 71X30X23 செ.மீ. அளவுள்ள கற்களால் மூடப்பட்டுக் காணப்பட்டது. கால்வாயின் அகலம் 54 செ. மீ. ஆழம் 41 செ. மீ. ஆகும். பக்க வாட்டில் நீர்க்கசிவு இல்லாமல் இருப்பதற் காகவும் வலிமைக்காகவும் இரு பக்கங்களிலும் செம்புராங் கற்களும் களிமண்ணும் குழைத்துக் கட்டப் பட்டுள்ளது. தண்ணீர் வரும் வழி முழுவதும் கருங்கற்களால் பாவப்பட்டும், அக்கால்வாயின் மேற்பகுதி கற்களால் மூடப்பட்டும் காணப்படுவதாலும் மாளிகைமேடு அருகே இக்குளம் காணப்படுவதாலும் இக்குளத் தினைச் சோழர் காலத்தில் அரச குடும்பத்தினர் பயன்படுத்தியிருக்க வேண்டும் என ஊகிக்க முடிகிறது.

**சோழகங்கம் (பொன்னேரி) மதகு :**

இராசேந்திர சோழனது கங்கைப் படையெடுப்பு வெற்றியின் நிறைவாக ஜலஸ்தம்பமாக (நீர்த்தூன்) அமைக்கப்பட்ட 'சோழ கங்கம்' என்னும் ஏரி தற்போது பொன்னேரி என அழைக்கப் படுகிறது. இவ்வேரி கங்கை கொண்டம் சோழபுரத்திலிருந்து 3கி.மீ. தூரத்தில் ஜெயங் கொண்டம் செல்லும் சாலையில் உள்ளது. இதன் கிழக்குப் பக்கத்தில் காணப்படும் மதகுக்கு அருகில் பண்டைய மதகின் கட்டட அமைப்பினை, அறியும் வகையில் அகழாய்வு மேற்கொள்ளப்பட்டது. இதன் மூலம் இராசேந்திர சோழன் காலத்திய மதகு வெளிப்படுத்தப்பட்டது. அம்மதகில் இரு பக்கங்களிலும் அரை வட்ட வடிவில் செங்கற் சுவர்கள் அமைக்கப்பட்டிருப்பதும், இரு சுவர்களுக்கும் இடையில் தரைப்பகுதியில் 3.60 மீட்டர் நீளமும் 80 செ.மீ அகலமும் உடைய தொட்டி போன்று கருங்கல்லால் அமைக்கப் பட்டிருப்பதும் அகழாய்வின் மூலம் தெரிய வந்தது. சோழ கங்கத்தின் நீர், இத்தொட்டியில் விழுந்து, அதன் பிறகு மதகின் துளை வழியாகச் சென்று வெளியேறும் வகையில் அமைத் திருப்பது கண்டு பிடிக்கப் பட்டது. பக்கச்சுவர்கள் அரை வட்ட அளவில் ஏன் அமைக்கப்பட்டிருக்கிறது என்று ஆய்ந்தபோது நீரின் வேகம்

தடுக்கப்பட்டு, அதன் பிறகு நீர் வெளியேற்றப் படுதல் வேண்டும் என்ற நோக்கத்தில் அமைக்கப் பட்டதாகத் தெரிய வருகிறது. தொட்டி போன்ற பகுதியில் வண்டல் படிந்து விடுவதால் பயிர்களுக்கு வண்டல் மண்ணால் கெடுதல் ஏற்படாமல் பாது காக்கப்பட்டது. இதே போன்ற அமைப்பைத்தான் பூம்புகாரில் சங்க காலத்தைச் சார்ந்த கட்டடப் பகுதியிலும் காண முடிகிறது. இது நீரின் வேகத்தைத் தடுக்கும் பொருட்டு ஏற்படுத்தப்பட்டதாகும்.

சோழகங்கம் ஏரியில் மதகுக்கு மேல் பகுதியில் மராட்டியர் காலக் கட்டடப்பகுதியும் அதற்கும்மேற் பகுதியில் ஆங்கிலேயர் காலக் கட்டடப் பகுதியும் காணப்படுகிறது. ஆதலால் சோழர் காலத் கட்டப்பட்ட மதகை, மராட்டியர் காலத்திலும், ஆங்கிலேயர் காலத்திலும் சீர்திருத்தியுள்ளார்கள் என்பதும் மற்றும் அதே மதகைத் தொடர்ந்து பிற்காலங்களிலும் பயன்படுத்தியிருக் கிறார்கள் என்பதும் தெரிய வருகிறது.

மேற்கண்ட இடங்களைத் தவிர மாளிகை மேட்டிற்கு அருகிலுள்ள கீழ் மாளிகைமேடு, மாளிகைமேடு புறம் போக்கு நிலங்களிலும் மாதிரி அகழாய்வுகள் (Trial Trenches) மேற்கொள்ளப் பட்டன.

**தொல்பொருட்கள் :**

கங்கை கொண்ட சோழபுரம் அகழாய்வில் பல தொல் பொருட்கள் கிடைத்துள்ளன. இவற்றைக் கொண்டு பண்டைய சோழர்கால அரண்மனை எவ்வாறிருந்தது என்பதைப் பற்றியும், சோழர் காலக்கலை மற்றும் நாகரிகச் சிறப்பினையும் அறிந்துக் கொள்ளலாம்.

**கூரை ஓடுகள் :**

கங்கை கொண்ட சோழபுரம் அகழாய்வில் அதிக அளவில் கிடைக்கும் தொல் பொருட்கள் கூரை ஓடுகளும் இரும்பு ஆணிகளுமேயாகும். இதில் கூரை ஓட்டு அமைப்பு தனிச்சிறப்பு வாய்ந்ததாகும். இக்கூரை ஓடுகளின் தலைப் பகுதி மரச் சட்டத்தில் பொருத்துவதற்கு ஏற்றாற்போல் கொக்கிபோன்று அரை வட்ட வடிவிலும் உள்ளன. இவை 20 X 15 செ.மீ. அளவுள்ளதாக உள்ளன.

**இரும்பு ஆணிகள் :**

அகழாய்வில் இரும்பு ஆணிகளும், பிடிப்பாணிகளும் அதிக அளவில் கிடைத்துள்ளன. இவை 3 செ.மீ முதல் 24செ.மீ. வரை நீளமுள்ளதாக உள்ளன. இவ்வாணிகளின் தலைப்பகுதி சதுர

வடிவிலுள்ளது. ஆணிகளின் தலைப் பகுதியை மரத்துடன் இனைக்குமிடத்தில் நான்கு இதழ்கள் கொண்ட பூ வடிவ இரும்புத் தகடுகள் பயன்படுத்தப்பட்டு அழகூட்டப் பெற்றுள்ளது. இவ்வாணிகள் மரப்பலகைகளை இணைத்துச் செய்யப்படும் பெரிய கதவுகளுக்கும், கூரையில் குறுக்கு நெடுக்காக அமைக்கப்படும் மரச்சட்டங் களை இணைப்பதற்கும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**வண்ணங்களுடன் கூடிய காரைத்துண்டுகள் :**

வண்ணம் பூசிய சுண்ணாம்புக் காரைத் துண்டுகள் இங்கு அகழ்ந்தெடுக்கப்பட்டன. அவை பச்சை, சிவப்பு, மஞ்சள் நிறம் கொண்டு விளங்குகின்றது. கட்டடங்களின் சுவர்ப்பகுதிகளிலும், விதானத்திலும் இவ்வண்ணங்களால் ஓவியங்கள் தீட்டப் பட்டிருந்தன என் ஊகிக்கலாம். வளைவான கோடுகளும் மலர் வடிவங்களும் ஓவியத்தில் இடம்பெற்றுள்ளன.

**தந்தப் பொருட்கள் :**

இங்கு தந்தத்தினாலான யாளி, யானை, ஆகிய உருவங்கள் கிடைத்துள்ளன. இவ்வுருவங்களை மர இருக்கைகளிலோ அல்லது மரத்தூணிகலோ பொருத்து வதற்குச் சிறு ஆணிகள் பயன்படுத்தப் பட்டன அவ்வாணிகள் பொருத்தப்பட்ட தடயங்கள் அவ்வுருவங் களில் காணப்படுகின்றன. அரண்மனையில் தந்தத்தினாலான பொருட்களை அலங்காரங்களுக்குப் பயன்படுத்தி மகிழ்ந்தனர் எனத் தெரிகிறது.

**அலங்காரம் செய்யப்பட்ட கற்கள் :**

அகழாய்வில் வட்டவடிமான விரிந்த தாமரை மலர்கள் செதுக்கப்பட்ட கற்கள் கண்டெக்கப்பட்டுள்ளன. இவை மணற்கற்களால் ஆனவை, இவை அரண்மனையிலிருந்த தூண்கள் மற்றும் சுவர்ப்பகுதிகளை அலங்கரிக்கப் பயன்படுத்தப் பட்டிருக்கலாம்.

இங்கு மணற்கல்லால் செய்யப்பட்ட வட்டவடிமான சந்தனம் அரைக்கும் கல்லின் துண்டுகள் கண்டுடெடுக்கப் பட்டுள்ளன. இத்துண்டுகளின் விளிம்பில் மலர்ந்த தாமரையின் இதழ்கள் செதுக்கப்பட்டுள்ளன. இவ்வட்ட வடிவமான கற்களின் அடியி கால்கள் அமைக்கப் பட்டுள்ளன. இவை சந்தனம் போன்ற நறுமணமிக்க பொருட்களை அரைப்பதற்குப் பயன்படுத்தப் பட்டிருக் கலாம். இதனால்

வாசனைப் பொருட்களை இங்கு வாழ்ந்த மக்கள் பயன்படுத்தியிருக்கக் கூடுமெனத் தெரிகிறது.

**வளையல் துண்டுகள் :**

சங்கினாலான வளையல் துண்டுகளும், கண்ணாடி வளையல் துண்டுகளும் இங்குக் கிடைத்துள்ளன. கண்ணாடி வளையல் துண்டுகள் மஞ்சள், பச்சை, கருப்பு மற்றும் நீல நிறங்களில் கிடைத்துள்ளன. சங்கினாலான வளையல்களை மகளிர் அணியும் வழக்கம் சங்க காலத்திலிருந்து இருந்து வருகிறது. சோழர் காலத்தே சங்கு வளையல்களுடன் கண்ணாடி வளையல்களையும் மகளிர் அணிந்துள்ளனர்.

**மணிகள் :**

பளிங்குக் கற்களாலான (Crystal stones) மணிகள் இங்கு கிடைத்துள்ளன. இம்மணிகளை மகளிர் கோர்த்து அணிகலன்களாகப் பயன்படுத்தியிருக்கக் கூடும்.

**குறுவாளின் கைப்பிடி :**

செம்பினாலான குறுவாளின் பிடி ஒன்று இங்கு கண்டெடுக்கப் பட்டுள்ளது. குறுவாள் மன்னர்களாலோ, அரண் மனையில் பணிபுரிந்த காவலர்களாலோ, வீரர்களாலோ பயன்படுத்தப்பட்டிருக்கலாம்.

**காசு வார்ப்புகள் :**

அகழாய்வில் காசுகள் செய்யப்பயன்படும் மண்ணாலான வார்ப்புகள் செவ்வக வடிவில் கிடைத் துள்ளன. இவ்வார்ப்புகளைக் கி.பி. 11.12ஆம் நூற்றாண்டு அளவில் புழக்கத்திலிருந்த காசுகளை வெளியிடப் பயன்படுத்தியிருக்கக் கூடும்.

**மட்பாண்டங்கள் :**

இங்கு கி.பி. 11–12ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த மட்பாண்டங் களின் பகுதிகள் நிறைய கிடைத்துள்ளன. இவை பெரும்பாலும் சிவப்பு நிறம் பொருந்தியவை. இவைகளின் விளிம்புப் பகுதிகளும், உடற்பகுதி யும் கனமாக உள்ளன. மண்சாடிகளின் கைப்பிடிகளும் மட்பாண்டங்களின் அடிப் பகுதிகளும், மூடிகளும், கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. சில மட்பாண்டங்களின் கழுத்துப் பகுதிகளில் கைவிரல் நகங்களால் அலங்கார வேலைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. சில மட்பாண்டங்கனின் தோள்

பகுதியில் மீன் முள் போன்ற அலங்கார வேலைப்பாடுகள் செய்யப் பட்டுள்ளன. ஓர் உடைந்த மட்பாண்டத்தின் கழுத்துப் பகுதியில் மீனின் உருவம் பொறிக்கப் பட்டுள்ளது. ஒரு வழவழப்பான சிறப்பு நிறமட்கலயத்தின் தோள் பகுதியில் வட்ட வடிவமான ஐந்து கோடுகளும் அக்கோடுகளுக்கு மேல் நடுவில் புள்ளியுடன் கூடிய சிறு வட்டங்களும் காணப்படுகின்றன. இம்மட்கலயங்கள் பானை, குடம், சாடி, குவளை, செம்பு, கலையம், கெண்டி போன்ற வடிவங்களில் செய்யப்பெற்றுள்ளன. சோழர் காலத்தில் உலோகத்தினாலான பாத்திரங்கள் பயன்படுத்தப் பட்டதைக் கல்வெட்டுகள் காட்ட, மட்பாண்டங்களும் பயன்பாட்டி லிருந்ததை அகழாய்வு தெளிவு படுத்துகிறது.

**சீன நாட்டுப்பானை ஓடுகள் :**

சீன நாட்டுப்பீங்கான் ஓடுகள் இங்கு குறிப்பிடத்தக்க அளவில் கிடைத்துள்ளன. அவை வெண்மை நிறத்திலும், வெளிர் செந்நிறத்திலும், உள்ளன. இச்சீனப்பானை ஓடுகள் கி.பி. 11–12ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவையென இவைகளைப் பார்வையிட்ட அறிஞர்கள் கருதுகின்றனர். கி.பி. 1015ஆம் ஆண்டிலும் 1033ஆம் ஆண்டிலும் முதலாம் இராசேந்திர சோழன் சீனத்திற்கு தன்னுடைய நட்பையும், அரசியல், வணிக உறவுகளையும் வலுப்படுத்த வதற்குத் தூதுக்குழுக்களை அனுப்பினான். சீன நாட்டுடன் கொண்ட அரசியல் மற்றும் வணிகத் தொடர்பு சீன தேசத்துப் பீங்கான் ஓடுகள் கங்கை கொண்ட சோழபுரத்துக்கு வர ஏதுவாக அமைந்தன. தமிழகத்தில் கிடைக்கும் சீனப் பீங்கான் ஓடுகளில் காலத்தால் முந்தியவை கங்கை கொண்ட சோழ அகழாய்விலேயே கிடைத்துள்ளன. தமிழகத்திலேயே பெரும்பரப்பளவில் சோழர் கால அரண்மனைப் பகுதிகள் வெளிப்படுத்தப்பட்டிருப்பது கங்கை கொண்ட சோழபுரத்தில்தான். சோழர்கலைக் கட்டடக் கலையையும், சோழமன்னர்களின் சிறப்பினையும் அறிந்துக் கொள்ள இவ்வாய்வு பெரிதும் உதவி செய்கிறது.

# அகழ்வைப்பகம்

கங்கைகொண்ட சோழபுரம், உட்கோட்டை கிராமத்தில் மாளிகைமேட்டுப் பகுதியில் தமிழ் நாடு அரசு தொல்லியல் துறை நடத்திய அகழாய்வின் மூலமும், இவ்வூரை சுற்றிலும் ஆய்வு மேற்கொண்டு அங்குக் கிடைத்த தொல்பொருள்களையும் கொண்டு சோழர்காலச் சமுதாய நிலையைக் கண்முன் கொண்டுவரும் விதமாக காட்சிப் படுத்தி தரப்பட்டுள்ள அகழ்வைப்பகமாகும் இது.

## 1. அகழாய்வு பொருட்கள்

மாளிகைமேடு அகழாய்வில் கிடைத்த பல்வேறு அளவுள்ள இரும்பு ஆணிகள், இரும்புத் தகடுகள், குறுவாள்பிடி, காசு வார்ப்புகள், சந்தனக்கல், செதுக்கப்பட்ட கல்பொருட்கள், மணற்கல்லால் ஆன பொருட்கள் மண்ணாலான கெண்டி மூக்குப் பகுதிகள், சிவப்புப் பானை ஓடுகள், சீன தேசத்துப்பானை ஓடுகள், வேலை பாட்டுடன் கூடிய தந்தப் பொருட்கள், சோழர்காலக் கண்ணாடி துண்டுகள், சுடுமண் விளக்கு மற்றும் பொருட்கள், செங்கற்கள், கூரைஓடுகள் ஆகியன விளக்க அட்டைகளுடன் காட்சி பெட்டியில் காண்போர் கண்ணையும் கருத்தையும் கவரும் வண்ணம் வைக்கப்பட்டுள்ளன.

## 2. சிற்பங்கள்

**விநாயகர் கற்சிற்பம் :—**

பெரம்பலூர் மாவட்டம், அரியலூர் வட்டம் பெரியமறை, உதயநத்தம் கிராமங்கலிருந்து கிடைத்த விநாயகர் கற்சிற்பங்கள் அகழ்வைப்பகத்தில் வைக்கப் பட்டுள்ளன. பெரியமறை விநாயகர் கி.பி. 11ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும் மற்றொன்று கி.பி.18ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும்.

**துவாரபாலகர்**

கி.பி. 16–17 நூற்றாண்டைச் சேர்ந்த அரியலூரிலிருந்து சேகரிக்கப்பட்ட இரண்டு துவாரபாலகர் கற்சிலை கள் உள்ளன.

**சிவலிங்கம்**

கி.பி. 12ம் நூற்றாண்டைச் சேர்ந்த சிவலிங்கதோடு கூடிய ஆவுடையார் கற்சிலை ஒன்று உடையார்பாளையம் வட்டம், முட்டுவாஞ்சேரி என்னும் கிராமத்திலிருந்து கொண்டுவரப் பட்டுக் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

**திருமால் :–**

அரியலூர் வட்டம் ஸ்ரீபுரந்தான், திருமழபாடி, திருமானூர், முட்டுவாஞ்சேரி, கங்கைகொண்டசோழபுரத்தை ஒட்டிய கிராமத்திலிருந்தும், சிதம்பரம் வட்டம் நெடுஞ்சேரிபுத்து தூரிலிருந்தும் கிடைத்த சோழர் காலம் மற்றும் நாயக்கர் கால திருமால் கற்சிலைகள் அழகுற வைக்கப்பட்டுள்ளன.

**அடிமுடிகாணா அண்ணல் :**

அரியலூர் வட்டம், குருவாடி, சிதம்பரத்திலிருந்து இரண்டு கற்சிலைகளும் மற்றும் உடையார்பாளையம் பகுதிகளிலிருந்து இறைவனின் அடிமுடியைக்கான பிரம்மனும் விஷ்ணுவும் முறையே அன்னம் மற்றும் வராக வடிவில் ஜோதி வடிவான சிவனின் அடிமுடி காணாமல் நிற்கும் கற்சிலைகள் கண்களுக்கு விருந்தாகக் காட்சியளிக்கின்றன.

**ஆலமர்செல்வன் :**

அரியலூர் வட்டம், பெரியமறை, கல்லக்குடி, ஏலாமாத்தூர் உடையவர்தீயனூர், திருமழபாடி, கங்கை கொண்ட சோழபுரம் ஆகிய இடங்களிலிருந்து கொண்டு வரப்பட்ட ஆலமர்செல்வன் (தட்சிணாமூர்த்தி) கற்சிலை கள் வைக்கப்பட்டுள்ளன.

**நான்முகன் :**

கி.பி. 11ம் நூற்றாண்டைச் சேர்ந்த பெரியமறை என்ற கிராமத்திலிருந்து கிடைத்த நான்முகன் கற்சிலை ஒன்று காட்சியில் உள்ளது.

**துர்க்கை :**

அரியலூர் வட்டம் பெரியகுறிச்சி, திருமழபாடி, இராயபுரம், மங்கதேவநல்லூர் மற்றும் அரியலூர், கங்கை கொண்ட சோழபுரம் ஆகிய பகுதிகளிலிருந்து கிடைத்த துர்க்கை கற்சிலைகள் வைக்கப்பட்டுள்ளன.

**இருதேவியருடன் குலோத்துங்கன் :**

இருதேவியருடன் நடுவில் நின்ற நிலையில் அஞ்சலி செலுத்தும் வண்ணம் இடுப்பில் அரையாடையுடன் மேலாடையின்றி முகத்தில் மீசையும் தாடியுடனும் பணிவுடன் காணப்படும் உருவம், முதலாம் குலோத்துங்க சோழனாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. சிதம்பரத்திலிருந்து இக் கற்சிலை சேகரிக்கப்பட்டது.

**புத்தர் :**

அரியலூர் வட்டம், கீழ்க் கொளத்தூரிலிருந்தும் தஞ்சை மாவட்டம் வலங்கைமான் புத்தூரிலிருந்தும் கொண்டு வரப்பட்ட பெரிதும் சிறிதுமான கி.பி. 10ம் நூற்றாண்டைச் சேர்ந்த இரண்டு புத்தர் சிலைகள் காட்சியில் உள்ளன.

**சமணச் சிற்பம் :**

அரியலூர் வட்டம், கொட்டரை என்ற கிராமத்தி லிருந்து கொண்டுவரப்பட்ட அர்த்த பரியங்காசனத்தில் இரண்டு கை களுடன் ஆழ்ந்த தியான கோலத்தில் தோன்றும் முக்குடைநாதரின் கற்சிலை பிற்கால சோழர் காலக் கலைக்கு எடுத்துகாட்டாக அமைந்துள்ளது.

**3. செப்புத்திருமேனிகள் :**

சோழர்கால செப்புத்திருமேனிகள் உலகப் புகழ் வாய்ந்தவையாகும்.

அகழ்வைப்பகத்தில் அய்யனார், பூரணை, புஷ்கலை, நாச்சியார் மற்றும் மாரியம்மன் செப்புத்திருமேனிகள் காட்சிக்கு வைக்கப் பட்டுள்ளன.

**அய்யனார் :**

பத்மபீடத்தில் வலது காலைக் கீழே தொங்கவிட்டு இடது காலை மடக்கி ஊன்றியமர்ந்த நிலையிலுள்ளது. வலக்கரத்தில் செண்டும் இடக்கரத்தை இடது முழங்காலிலும் வைத்துள்ளது. இதன் காலம் கி.பி.16–17 நூற்றாண்டாகும்.

**பூரணை :**

அய்யனாரின் துணைவியாரான இப்பூரணை, பத்மபீடத்தில் வலது காலைத் தொங்கவிட்டு இடது காலை மடக்கிய நிலையில் காணப்படுகிறது. இடது கரத்தில் தாமரை மலரேந்தி, வலது கரம் தொங்கவிடப் பட்ட நிலையில் கரண்ட மகுடமும் காதுகளில் பத்ரகுண்டலங்களும் மார்பில் கச்சையும், கழுத்தில் மணி மாலையும், கால்களில் சிலம்பும், தண்டையும் அணிந்து பாதம் வரை ஆடையுடன் விளங்குகிறது.

**புஷ்கலை :**

பத்மபீடத்தில் அமர்ந்து வலது காலை மடக்கி இடது காலைத் தொங்கவிட்டு அமர்ந்த நிலையில் வலது கரத்தில் மலரும், இடது கரம் தொங்கும் கரமாகவும், மார்பில் கச்சையின்றியும் கால்களில் சிலம்பும் தண்டையும், காதுகளில் பத்ரகுண்டலங்களும், கழுத்தில் மணிமாலையும் பாதம்வரை ஆடையுடன் காணப்படுகிறது.

**நாச்சியார் :**

கி.பி. 16–17ம் நூற்றாண்டினைச் சேர்ந்த இத்திரு மேனி தாமரைப் பீடத்தின் மீது நின்ற நிலையில் உள்ளது. வலது கரம் மலர் ஏந்தியும், இடது கரம் தொங்கும் கரமாகவும், தலையில் கரண்ட மகுடமும், காதுகளில் மகர குண்டலங்களும், கழுத்தில் மாலையும், இடுப்பிலிருந்து கால் வரை வரிவரியான அமைப்பில் ஆடையும், மார்பில் கச்சையின்றியும் காணப்படுகிறது.

**மாரியம்மன் :**

பத்மபீடத்தின் மீது வலது காலைத் தொங்க விட்டு இடது காலை மடக்கி சுகாசனத்தில் அமர்ந்துள்ளது. இதன் காலம் கி.பி.19ஆம் நூற்றாண்டாக இருக்கலாம் நான்கு கரங்களில் முன் வலது கரத்தில் கத்தியும், பின் வலது கரத்தில் திரிசூலமும், முன் இடது கரத்தில் கபாலமும், பின் இடது கரத்தில் உடுக்கையும் அதன் மீது, சுற்றிய பாம்பும் காணப்படுகிறது. தலையில் சுடர்முடியும், காதுகளில் பத்ரகுண்டலங்களும் கழுத்தில் பதக்கத்துடன் கூடிய மாலையும், மார்பில் கச்சையின்றியும் இடுப்பில் ஆடையும் கால்களில் சிலம்பும் கொண்டு, பீடத்தில் ''தத்தனூர் மாரி அம்மன், முத்துமாரி துணை'' என்ற எழுத்துப் பொறிப்புடன் உள்ளது.

மேற்படி செப்புத் திருமேனிகள் பெரம்பலூர் மாவட்டம் உடையார்பாளையம் வட்டம் கீழ்வேலி என்ற ஊரிலிருந்து பெறப்பட்டவையாகும்.

## 4. கல்வெட்டுகள்

வரலாற்று செய்திகளுக்கு அடிப்படை ஆதாரமாய் விளங்குவது கல்வெட்டாகும். இவ்வகழ்வைப்பகத்தில் சோழர், பாண்டியர், நாயக்கர் காலக்கல்வெட்டுகள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

### முதலாம் பராந்தகன் காலக் கல்வெட்டு

முதலாம் இராசேந்திரனின் ஆட்சி காலத்திற்கு முன்பே இவ்வூர் ஒரு வணிக நகரமாக இருந்திருக்க கூடும் என்பதற்குச் சான்றாக முதல் பராந்தக சோழனின் 22வது ஆட்சி ஆண்டில் வெட்டப்பட்ட இக்கல்வெட்டு அமைந்துள்ளது.

இக்கல்வெட்டில் தஞ்சாவூர் இருமடி சோழப் பெருந்தெருவிற்கு வந்து குடியேறின வளஞ்சியர் ஐநூற்றுவுர்க்கு இடம் வேண்டுமென்று மூவேந்தப் பெருந்தச்சன் என்பவன் நாரணமங்கல முடையான் என்னும் அரசனது மதிள் நாயகத்திடம் நேரிடையாகக் கூற, அதனைக் கேட்ட மதிள்நாயகம் அரசனிடம் மனுச்செய்து கொள்ள, அரசனும் அதற்கு இசைந்து அவர்களுக்கு வசிப்பதற்கு இடமும் தொழில் செய்ய இடமும், வெட்டி, வேதனை, இறை, எச்சோறு முதலான வரிகளை நீக்கிப் பரிசாக அளித்துள்ளான் என்ற செய்தி காணப்படுகிறது. இக்கல்வெட்டு உட்கோட்டை கிராமத்தில் அகழாய்வு செய்த கீழ் மாளிகைமேட்டு பகுதியிலிருந்து சேகரிக்கப்பட்டது.

### கல்வெட்டு வாசகம்

1. ஸ்வஸ்திஸ்ரீ மதிரைகொண்ட கோ
2. ப் பரகேசரி வர்மர்க்குயாண்டு
3. இருபத்தியிரண்டாவது மதிணாயகஞ்செ
4. ய்கின்ற நாரண மங்கலமுடை
5. யான் விண்ணப்பத்தினால் மூவே
6. ந்தப் பெருந்தச்சன் வாய்கேழ்வி
7. யில் தஞ்சாவூர் இருமடிசோ
8. ழப் பெருந்தெருவில் ஏறினவளஞ்
9. சியர் ஐநூற்றுவர்க்கு அருளிச்

10. செய்த அருளினால் பெற்ற பரிச
11. மாவது வெட்டியும் வேதனை
12. யும் இறையும் எச்சோறும் இ
13. றாததாக நிலைத்தளமும் பேட்டை
14. த்தாவளமும் இவகளேய் பெ(ற்)று
15. வதாகவும்........... எப்பேர்
16. பட்ட கோவும் புக்குந
17. லியிததாகவும் இப்பரிசு
18. எப்பேர்ப்பட்ட ஸ்ர்வபாகம்
19. சந்திராதித்தவர்க்கு அருளிச்
20. செய்...................................
21 ..........................................
22 ..........................................

**சுந்தரபாண்டியன் கல்வெட்டு**

செயங்கொண்ட சோழபுரம் பேருந்து நிலையத்துக்கு அருகேயுள்ள ஏரியில் (இன்று ஆவேரி) ஒரு கல்வெட்டு தூண்புதைந்திருந்தது. அக்கல்வெட்டு தூண் தற்போது அகழ்வைப்பக காட்சியகத்தில் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது. தூணின் மூன்று பக்கங்களிலும் எழுத்துகள் பொறிக்கப்பட்டுள்ளன. கல்வெட்டின் மேலே மூன்று பக்கங்களிலும் விளக்கு உருவமும் உடுக்கைவடிவமும் பொறிக்கப் பட்டுள்ளது.

இக்கல்வெட்டில், ஏற்கனவே சோழர்காலத்தில் வெட்டப் பட்ட ஏரி ஏனோ பராமரிப்பின்றி போகச் சுந்தர பாண்டியன் காலத்தில் நீர் வருவது குறைந்து விட்டது. எனவே, நன்னையூர் என்ற ஊரைச் சேர்ந்த ''திருவிக்கிரமன்'' என்பவன் இவ்ஏரிக்கு தண்ணீர் வரும் வழியைச் சீர் செய்து தலைமடையில் மேடு பள்ளங்களை வெட்டி அந்நீரை குடிநீருக்காக மட்டுமே பயன் படுத்த வேண்டும், ஏற்றம் வைத்து நீர் இறைக்கவோ அல்லது நீர் பாசனம் செய்யவோ கூடாது என்றும் அவ்வாறு செய்வோர் களோயானால் அவர்கள் நகரத் துரோகிகள் ஆவார்கள் என்று குறிப்பிடுகிறது.

## கல்வெட்டு வாசகம்

முதல் பக்கம்
1. ஸ்வஸ்திஸ்ரீ
2. கோச்ச
3. டையபன்மர்
4. திரிபுவந
5. ச் சக்ர
6. வத்திக
7. ன் ஸ்ரீசு
8. ந்தரபா
9. ண்டிய
10. தேவற்
11. குயான்
12. டுயஉவ
13. துவை
14. ய்காசி
15. மாதமு
16. தல்செ
17. யங்கொ

இரண்டாம் பக்கம்
1. ண்ட
2. சோழப்
3. பேரே
4. ரி அக
5. யில்
6. நன்னை
7. யூருடை
8. யார்தி
9. ருவி
10. கிரமந்வெ
11. ட்டின
12. தன்ம
13. க்குள
14. த்தில் யி
15. ன் நீரி

11826

16. றைத்த(ல்)
17. (ப)ாச்சுத
மூன்றாம் பக்கம்
1. ல் செய்
2. ய நினை
3. த்தார்
4. உணடா
5. கில் நக
6. ரத்து
7. ரோகி
8. நம்மி
9. லொ
10. ருத்த
11. ரல்லா்

**நாயக்கர் காலக் கல்வெட்டு**

கி.பி. 17ம் நூற்றாண்டைச் சேர்ந்த நாயக்கர் காலக்கல்வெட்டு ஒன்று அகழ்வைப்பகத்திலுள்ளது. இதில் கங்கைகொண்ட சோழபுரம் ''கங்கைகொண்டம்'' என்று சுருக்கமாக குறிக்கப்பட்டுள்ளது கல்வெட்டு மிகவும் தேய்ந்துள்ளது. இவ்வூரைச் சேர்ந்த ஒருவர்க்கு நிலம் சர்வ மானியமாகக் கொடுக்கப்பட்டதை குறிப்பிடுகிறது.

**தர்மசத்திரம் கல்வெட்டு :**

இந்தியத் தெல்லியல்துறை கங்கைகொண்ட சோழபுரம் பெரிய கோயிலின் முன்புறம் உள்ள கோயில் இடங்களைக் கையகப்படுத்திய போது அங்கிருந்த வீடுகளின் இடி பாடுகளிலிருந்து கி.பி. 1917ம் ஆண்டு வெட்டப்பட்ட கல் வெட்டு ஒன்று கண்டறியப்பட்டது. இதன் மூலம், இக்கிராமத்தில் மாணிக்கத்தம்மாள் தர்மசத்திரம் என்ற ஒன்று இருந்ததாகத் தெரியவருகிறது. ஆனால் இன்று அதற்கான தடயங்கள் ஏதும் காணப்பட வில்லை.

**கல்வெட்டு வாசகம்**

சிவமயம்

1. கெங்கை க
2. ண்டபுரம் மு
3. ருக செட்டியா

4. ர் குமாரத்தி
5. ஓலையூர் சா,
6. குமரசாமி செ.
7. ட்டியார் பாரியா
8. ள் மாணிக்கத்
9. தம்மாள் தர்ம
10. சத்திரம் 1917
11. பிங்கள இ
12. வைகாசி மாச
13. ம் 29 உ

## குறிப்பு

கங்கைகொண்ட சோழபுரம் முருக செட்டியாரின் மகளும், ஓலையூர் சா. குமாரசாமி செட்டியாரின் மனைவி யுமான மாணிக்கத் தம்மாள் பெயரில் தர்மசத்திரம், கி.பி 1917, ல் பிங்கள வருடம் வைகாசி மாதம் 29ம் தேதி நிறுவப்பட்டது.

**5. ஓலைச் சுவடிகள் :**

இவ்வகழ்வைப்பகத்தில் இவ்வூர் மற்றும் இவ்வூரைச் சுற்றியுள்ள பகுதிகளிலிருந்து சேகரிக்கப்பட்ட ஓலைச் சுவடிகள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன அவையாவன.

1. விநாயகர் வரலாறு
2. திவாகரம்
3. திருக்குறள்
4. நீதி வெண்பா
5. அருணகிரி அந்தாதி
6. அருணகிரி அந்தாதி – உரையுடன்
7. அபிராமி அந்தாதி
8. அனுப்பேரிசா தேவாரி துர்லபம்
9. அகஸ்தியர் பாடல் வைத்தியம்
10. ஆதி பருவம்
11. உதயண குமாரகாவியம்
12. சூரபத்மண் சிங்கமுகன் தாரகன்
13. ரதி மன்மதன் வரலாறு

**6. போர்க்கருவிகள் :**

கங்கைகொண்ட சோழபுரத்திலிருந்தும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களிலிருந்தும் பெறப்பட்ட போர்க்கருவி களான இரும்புக் கத்திகள், அரிவாள், பிச்சுவாக்கத்தி, வாள், கட்டாரி போன்ற ஆயுதங்கள் காட்சிப் படுத்தப்பட்டுள்ளன. அரிவாள் ஒன்றில் "பிரமாதீச வருடம் ஆனி மாதம் 14ஆம் தேதி ஆதுகுடுபள்ளச் சேரியிருக்கும் இருவாண்டி அம்மான் பெரிய கருப்புக்கு படவியாவரி மூப்பன் செய்த உபயம்" என்ற எழுத்து பொறிப்புடன் உள்ளது இவ்வரிவாளில் பொறிக்கப்பட்டுள்ள ஊரான ஆதுகுடுபள்ளச் சேரி இன்று 'ஆடுகுடு பள்ளச்சேரி' என அழைக்கப்படுகிறது.

**7. பிற காட்சிப் பொருட்கள் :**

செம்பினாலான சோழர் காலத்துக் கோபுர வடிவ பூஜை பாத்திரம் ஒன்று, இரண்டு தளங்களைக் கொண்டுள்ளது. கீழ்த்தளத்தில் நான்கு மூலைகளிலும் சிறிய நந்தி உருவமும் காணப்படுகிறது மற்றும் கலசம், கெண்டி, விபூதி கலசம் ஆகியன உள்ளன. இவையனைத்தும் அரியலூர் வட்டத்தில் கொட்டரை என்ற ஊரிலிருந்து கிடைத்தவையாகும். சோழர்கால வளையல் துண்டுகள், மதிப்புமிக்க உயர்ந்த கற்கள் (Precious sotone), மணிகள் (Beads), சோழர் மற்றும் நாயக்கர் காலச் செப்பு காசுகள் ஆகியன காட்சியில் வைக்கப் பட்டுள்ளன.

**பிற சிறப்புகள் :**

மேலும் கங்கைகொண்ட சோழபுரம் அகழ்வைப்பகத்தில் பைரவர் சப்த மாதர்கள், தவ்வை (ஜேஷ்டா), திருமகள், நிலமகள், விசுவக்சேனர், மலைமகள், முருகன், சண்டிகேசுவரர், அய்யனார், நந்தி, சிம்மம், வீரன், முனிவர் போன்ற கற்சிலைகளும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

**பாதுகாக்கப்பட்ட வரலாற்றுச் சின்னங்கள் :**

செங்கமேடு :

கங்கைகொண்ட சோழபுரத்திலிருந்து சுமார் 4 கி.மீ தென் கிழக்கே செங்கமேடு என்ற கிராமம் அமைந்துள்ளது இக் கிராமத்தில் மிக உயரமான (2.35 X1.70 செமீ) காளி, சிலையொன்று கைகளில் பல்வேறு ஆயுதங்களுடன் பீடத்தில் அசுரனின் மீது ஆவேசத்துடன், நிலைநிறையுடன் காட்சியளிக்கிறது. கலிங்க நாட்டிலிருந்து (ஒரிசா) கொண்டுவரப்பட்ட சிவப்பு கற்களில் (Red Stone) செதுக்கப்பட்ட

பைரவர், பைரவி சிற்பங்களும் தொல்லியல்துறையில் பாதுகாக்கப்பட்ட (Protected Monument) அறிவிக்கப்பட்டுள்ளது. இச்சிற்பங்கள் ஆடையின்றிக் கபால மாலையுடனும் நான்கு கைகளுடனும் உள்ளன. மேலும் பைரவி சிற்பத்தின் அருகில் ஆடையின்றி இரு கைகளுடன் ஒரு ஆணின் உருவமும் பின்னால் ஒரு நாயின் உருவமும் காட்டப்பட்டுள்ளது. மேற்படி பைரவர், பைரவி, கற்சிற்பங்கள் இராசேந்திர சோழன் தான் வெற்றிபெற்ற நாடுகளிலிருந்து தனது வெற்றியின் அடையாளமாக கொண்டுவரப்பட்டதாகும்.

**மேலப்பழுவூர், கீழையூர் (இரட்டைக் கோயில்) :**

பெரம்பலூர் மாவட்டம், அரியலூர் வட்டத்தில், அரிலூர் – திருச்சி நெடுஞ்சாலையில் அரியலூரிலிருந்து சுமார் 15கீ.மீ. தொலைவில் இக்கிராமம் அமைந்துள்ளது. இக்கிராமத்தில் பழுவேட்டரையரால் கட்டப்பட்ட 'அவனி கந்தர்ப்ப ஈசுவர கிருகம்' என்னும் கோயில் கலைக்காவியமாகத் திகழ்கிறது. மன்னுபெரும் பழுவூர் என்று சிறப்பாக அழைக்கப்படும் இவ்வூரைத் தலைநகராகக் கொண்டு சோழ அரசர்களுக்கு நல்ல துணையாக நின்றவுர்கள் பழுவேட்டரை யாகள் ஆவார். இக் கோயில் அமைந்திருக்கும் இடம் அவனிகந்தர்வபுரம் எனவும் அவனிகந்தர்ப்புரம் என்றும் கல்வெட்டுகளில் குறிக்கப்படுகின்றன. இக்கோயில் திருச்சுற்றில் இரண்டு கோயில்கள் உள்ளன. இது முழுமையும் அவனிகந்தர்ப்ப ஈசுவரகிருகம் என அழைக்கப்படுகிறது. திருச்சுற்றில் வடபுறம் இருக்கும் கோயில் வடவாயில் ஸ்ரீகோயில் என அழைக்கப்படுகிறது. தென்பகுதியில் அமைந்துள்ள கோயில் தென்வாயில் ஸ்ரீகோயில் என அழைக்கப்படுகிறது. கணபதி, முருகன், சண்டிகேசுவரர், ஜேஷ்டை, சூரியன், சப்தமாதர் ஆகியோருக்கு பரிவார ஆலயங்கள் திருச்சுற்றில் உள்ளன. வடவாயில் ஸ்ரீகோயிலின் விமானம் முழுமையும் கல்லால் தனது வட்ட வடிவமான(வேசரம்) சிகரத்தை உடையதாக விளங்குகிறது. கருவறை தேவகோட்டங்களில் கிழக்கு தேவகோட்டத்தில் முருகனின் அமர்ந்த கோலத்தைக் காண்கிறோம். மேலிருகரங்களில் வஜ்ரம்சக்தி ஆயுதங்களைத் தாங்கியிருக்க முன் வலக்கை அபயமுத்திரை தாங்கியுள்ளது. திருமேனியின் பின்னால் தீச்சுடர்கள் ஒளி வீசுவது போல பிரபை அமைந்துள்ளது சிறப்பாகும்.

இதனை அடுத்து அமைந்துள்ள தென் வாயில் ஸ்ரீகோயில் விமானம் முழுமையும் கல்லால் ஆனது. கருவறை விமானம் சதுர வடிவமாக (நாகரம்) விளங்குகிறது. இக்கோயில் கருவறை தேவகோட்டங்களில்

மேல்புறம் அமைந்துள்ள மகரதோரணங்களில் நுண்ணிய வேலைப் பாடுடன் அழகிய சிற்பங்களுடன் காட்சிதருகிறது.

இக்கோயிலின் மகாமண்டபம் வேலைப்பாடுமிக்க சிம்மம்– யாளி தூண்களிடன் காட்சி அளிக்கிறது. இத்தூண்களில் கலியுக நிம்மலன், கங்கமார்த்தாண்டன், மறவன் மானதனன், அரையுகள் அரையுளி, ராஜராஜ வஞ்சி இளங்கோ என்ற பெயர்கள் கல்வெட்டாகப் பொறிக்கப்பட்டு காணப்படுகின்றன. இப்பேரழகு மண்டபத்தை இவர்கள் உருவாகக் உதவியிருக்கவேண்டும்.

ஒரு கோயில் திருச்சுற்றில் இரண்டு கோயில்கள், பரிவார ஆலயங்கள் இரண்டுவிதமான விமான அமைப்புகள், அழகிய சிற்பங்கள் ஆகியவற்றுடன் காட்சிதரும் அவனிகந்தர்ப்பஈசுவரகிருகம், பழுவேட்டரைய அரசர்களில் ஒப்பற்ற கலைப்படைப்பாக விளங்குகிறது. இக்கோயில் தொல்லியல் துறையால் பாதுகாக்கப்படும். வரலாற்றுச் சின்னமாகத் திகழ்கிறது.

**நகர்வலம் :**

கங்கை கொண்ட சோழபுரத்தைச் சுற்றிலும் பல வரலாற்றுச் சிறப்புகளுடைய ஊர்கள் இன்றளவும் உள்ளன.

**கணக்கு விநாயகர் கோயில் :**

கங்கைகொண்ட சோழபுரம் கோயிலுக்கு தென் மேற்கே சுமார் 1/2கி.மீ தொலைவில் இக்கோயில் உள்ளது. அங்கு விநாயகர் நான்கு கைகளுடன், பீடத்தில் அமர்ந்த நிலையில் உள்ளார். இக்கற்சிலை சாளுக்கியக் கலைப்பாணியைச் சார்ந்தாகும்.

**வீராரெட்டித்தெரு :**

கங்கைகொண்டசோழபுரத்துக்கு அருகே 3கி.மீ தொலைவில் இவ்வூர் அமைந்துள்ளது. இங்கு நுளம்பர் கலைப்பாணியில் அமைந்த துர்க்கை ஒன்று எட்டு கைகளுடன் நின்ற நிலையில் காணப்படுகிறது.

**சலுப்பை :– (அழகர் கோவில்)**

கங்கைகொண்ட சோழபுரத்துக்கு வடக்கே சுமார் 5கி.மீ. தொலைவில் சாளுக்கியர் கலைப்பாணியில் உருவான துர்க்கை ஒன்றுள்ளது. சலுப்பை என்ற கிராமம் அமைந்துள்ள அழகர் கோவில் கிராமத்தில் சுமார் 80 அடி உயரத்துடன் சுதையால் செய்யப்பட்ட நாயக்கர்

காலக் கலைப்பாணியுடன் கூடிய மிகப் பெரிய யானைச் சிற்பம் அனைவரும் வியக்கும் வண்ணம் அமைந்துள்ளது.

**மண்மலை :**

கங்கை கொண்ட சோழபுரத்துக்கு அருகே சுமார் 4 கி.மீ தொலைவில் இவ்வூர் அமைந்துள்ளது. சாளுக்கிய கலைப் பாணியுடன் கூடிய அழகிய துர்க்கை சிற்பம் இங்கு வழிபாட்டில் உள்ளது.

**திரைலோக்கி :**

கங்கைகொண்ட சோழபுரம் – குடந்தை சாலையில் சுமார் 18கி.மீ தொலைவில் இவ்வூர் அமைந்துள்ளது. இவ்வூர் கோயிலில் நந்தியின் மீது சிவனும் பார்வதியும் உமாமகேசுவரராக அமர்ந்த நிலையிலும், முருகன் வள்ளி, தெய்வானை கற்சிற்பங்களும் நுளம்பர் கலைப் பாணியுடன் அமைந்துள்ளன.

**மெய்காவல் புத்தூர் :**

கங்கைகொண்ட சோழபுரத்துக்கு அருகே 3 கி.மீ தொலைவில் சோழப் படை வீரர்கள் இருந்த இடமாக மெய்காவல்புத்தூர் கூறப்படுகிறது.

**உட்கோட்டை :**

அரண்மனைக் கோட்டை மகிற்சுவருக்குள் உட்கோட்டையாக இவ்வூர் இருந்துள்ளது. கி.பி. 16–17ம் நூற்றாண்டைச் சேர்ந்த கோயில் ஒன்றும் உள்ளது. கங்கை கொண்ட சோழபுரத்துக்குத் தென்மேற்கே சுமார் 4கி.மீ தொலைவில் இவ்வூர் அமைந்துள்ளது.

**ஆயுதக்களம் :**

உட்கோட்டைக்குத் தென்மேற்கே சுமார் 5கி.மீ தொலைவில் இக்கிராமம் அமைந்துள்ளது. ஆயுதங்கள் செய்யும் இடமாக விளங்கியதால் இவ்வூர் ஆயுதக்களம் என்று பெயரினைப் பெற்றிருக்கலாம். இவ்வூரில் இருந்து அழகிய அய்யனார் கற்சிலை ஒன்று சேகரிக்கப்பட்டு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

**கடாரங்கொண்டான் :**

இராசேந்திர சோழனால் வெட்டப்பட்ட சோழகங்கம் என்னும் பொன்னேரியை ஒட்டி இக்கிராமம் அமைந்துள்ளது இம்மன்னன் கடாரத்தை வெற்றி கொண்டதன் நினைவாக இவ்வூர் அப்பெயரில் அமைந்துள்ளது எனலாம்.

**வீரசோழபுரம் :**

இராசேந்திர சோழனின் சிறப்பு பெயர்களில் ஒன்றான வீரசோழன் என்ற பெயரால் இவ்வூர் இப்பெயர் பெற்றிருக் கலாம் கங்கைகொண்ட சோழபுரத்திலிருந்து சுமார் 6கி.மீ தொலைவில், இவ்வூர் அமைந்துள்ளது.

**கொல்லாபுரம் :**

சாளுக்கியர்களின் தலைநகரமாகிய கொல்லாபுரத்தை வெற்றிக் கொண்டதன் நினைவாக இவ்வூர் கொல்லாபுரம் என அழைக்கப்பட்டிருக்கலாம். இரண்டாம் ராஜேந்திரசோழனின் மெய்கீர்த்தியில் 'இரட்டபாடி ஏழரை இலக்கமுங் கொண்டு கொல்லாபுரத்து ஜயஸ்தம்பம் நாட்டி' என்று குறிப்பிடப் படுகிறது. இவ்வூரில் 11ம் நூற்றாண்டைச் சேர்ந்த அபராதரட்சகர் கோயில் உள்ளது.

**குருவாலப்பர் கோயில் :**

இவ்வூரில் வீரநாராயனப் பெருமாள் கோயில் ஒன்றுள்ளது. இது குருகைகாவலப்பர் என்ற முனிவர் யோகம் செய்து அடக்கமான இடமுமாகும். இவருடைய குருவாகத் திகழ்ந்த நாதமுனிகள் இவ்வூரில் அடக்கம் அடைந்ததாகவும் கூறப் படுகிறது. கங்கை கொண்ட சோழபுரம் செயங்கொண்டம் சாலையில் 2 கீ.மீ தொலைவில் இவ்வூர் அமைந்துள்ளது. வைணவர்கள் போற்றும் கோயிலாக விளங்குகிறது.

**முத்து சேர்வாமடம் :**

கி.பி 12ம் நூற்றாண்டைச் சேர்ந்த வரதராஜப் பெருமாள் கோயில் ஒன்று இவ்வூரில் உள்ளது. உடையார் பாளையம் பாளையகாரர்களால் இக்கோயில் பிற்காலத்தில் திருப்பணி செய்யப்பட்டது. கங்கைகொண்ட சோழபுரத்திலிருந்து சுமார் 2கி.மீ தொலைவில் உள்ளது.

**நெல்லித் தோப்பு :—**

நாதமுனிகளால் மங்களாசாசனம் செய்யப்பட்டதாக கூறப்படும் நாதமுனி ரங்கநாதர் கோயில் ஒன்று இவ்வூரிலுள்ளது மகாமண்டபத் தூண்களில் சோழர் காலக் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இவ்வூர் கங்கைகொண்டசோழ புரத்துக்கு 2 கி.மீ தொலைவில் உள்ளது.

**இளையபெருமாள் நல்லூர் :–**

இவ்வூரிலிருந்து சோழர் காலத் திருமால் மற்றும் திருமகள் சிற்பங்கள் சேகரிக்கப்பட்டுத் தற்போது அகழ் வைப்பகத்தில் காட்சிக்கு வைக்கப் பட்டுள்ளது. கங்கைகொண்டு சோழபுரத்திலிருந்து வடக்கே 2 கி.மீ தொலைவில் இவ்வூர் உள்ளது.

மற்றும் வரலாற்று சிறப்பு மிக்க உடையார்குடி, கடம்பூர், திருநாரையூர், திருச்சின்னம் பூண்டி, மீன்சுருட்டி, விளந்தை (ஆண்டிமடம்) ஸ்ரீமுஷ்ணம், ஸ்ரீபுரந்தான், கோவிந்தபுத்தூர், காமரசவல்லி, தூத்தூர், வீராணம், வானமாதேவி போன்ற ஊர்கள் கங்கொண்ட சோழபுரத்தை மையமாக கொண்டு அமைந்து வரலாற்றுச் சிறப்பினை எடுத்துக் கூறுகின்றன.

# துணை நூற்பட்டியல்


| | |
|---|---|
| **Nagasamy, R.** | 1970, Gangai Konda Cholapuram, Dept, of Archaeology, Govt. of Tamilnadu. Chennai. |
| **Nagasamy, R.** | Archaeology, finds in s.India, Esalam Bronzes and copper plates, Bulletin DE l'Ecole Francaise Paris- 1987 |
| **Kasinathan, N.** | 1998, The Metropolis of medieval cholas, Dept. of Archaeology, Govt. of Tamilnadu, Chennai. |
| **Sivaramamoorthy .C** | The chola temples. A.S.I. 1992. |
| **Bala subramanian.S.R** | Middle chola temples - 1975 |
| **Selvaraj, s.** | 1987, Gangai kondacholapuram Excavation, Tamil civilization, Vol.3. No.1&2 PP. 124-127, TamilUniversity, Thanjavur. |
| **நாகசாமி, இரா.** | 1980, கங்கை கொண்ட சோழபுரம், தமிழ் நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை. |
| **இராசசேகரதங்மணி, ம.** | 1973, முதலாம் இராசேந்திர சோழன், தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை. |
| **காசி நாதன், நடன.** | 1995, இராசேந்திரன் காலக் கட்டடக் கலை கல்வெட்டு எண்: 44, பக். 1–11, தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை. |
| **அப்துல் மஜீத், அ.** | 1996, கங்கை கொண்ட சோழ புரத்து அரண்மனை வாழ்க்கை, கல்வெட்டு எண்:48, பக்– 13–18, தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை, |

**சந்திரமூர்த்தி, மா., ஸ்ரீதரன், கி., நெடுஞ்செழியன், சா.** 1993, இராசேந்திர சோழன் அகழ் வைப்பகம், தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை.

**துளசிராமன், து.** 1987, கங்கை கொண்ட சோழபுரம் அகழாய்வும் தொல் பொருட்களும், ஆய்வுக்கோவை–19, இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், அண்ணாமலை நகர், சிதம்பரம்.

**நெடுஞ்செழியன், கா.** 1991, கங்கை கொண்ட சோழபுரம் அகழாய்வு, கல்வெட்டு எண் : 31, பக். 7–15, தமிழ் நாடு அரசு தொல்லியல் துறை சென்னை.

**நெடுஞ்செழியன், கா.** கங்கை கொண்ட சோழபுரம் அகழ்வைப்பகக் கல்வெட்டுகள் கல்வெட்டு இதழ் 34

**காசிநாதன்–நடன** எசாலம் செப்பேடு – கல்வெட்டு இதழ்கள் 37,38, தொல்லியல் துறை, சென்னை.

## பின்னிணைப்புகள்
## முதல் இராசேந்திரசோழனின்
## வரலாற்றுக் குறிப்புகள்

| | | |
|---|---|---|
| தந்தை | : | இராசராச சோழன் |
| தாய் | : | திரிபுவன மாதேவி என வழங்கும் வானவன் மாதேவி |
| பிறப்பு | : | மார்கழித்திங்கள் திருவாதிரை நாள் |
| இயற்பெயர் | : | மதுராந்தகன் |
| பட்டப்பெயர் | : | இராசேந்திரன் |
| ஆட்சிக்காலம் | : | கி.பி. 1012– 1044 |
| மறைவு | : | கி.பி. 1044 |

### சிறப்புப் பெயர்கள்

1. உத்தம சோழன்
2. சோழேந்திரசிம்மன்
3. விக்ரம சோழன்
4. முடி கொண்ட சோழன்
5. பண்டிதசோழன்
6. கடாரங் கொண்ட சோழன்
7. கங்கைகொண்ட சோழன்
8. வீரராசேந்திரன்
9. பூர்வதேசமும் கங்கையும் கடாரமும் கொண்ட அய்யன்
10. அதிசய சோழன்
11. ஜயசிம்மசரபன்
12. மலைநாடு கொண்டசோழன்
13. மண்ணைக்கொண்ட சோழன்
14. மகிபாலகுலகாலன்
15. வீரசோழன்

16. இராசராசேந்திரன்
17. மதுராந்தகன்
18. இரட்டபாடிகொண்டசோழன்
19. நிருபதிவாகரன்
20. பார்த்திவேந்திரன்
21. மனுகுலசோழன்
22. இராசவித்யாதரன்
23. உதாரவிடங்கன்
24. தானவினோதரன்
25. பாரக்கிரமசோழன்

**இராசேந்திரசோழனின் மனைவியர், மக்கள்**

1. முக்கோக்கிழானடிகள்
2. அரிந்தவன் மாதேவி
3. வானவன் மாதேவி (ஆகிய) திரிபுவனமாதேவி
4. வீரமாதேவி
5. பஞ்சவன் மாதேவி

**பெண் மக்கள்**

1. அருமொழிநங்கை
2. அம்மங்கை

**ஆண் மக்கள்**

1. இராசாதிராசன்
2. இரண்டாம் இராசேந்திரன்
3. இராசமகேந்திரன்
4. வீரராசேந்திரன்

**இராசேந்திரன் காலத்தில் கட்டப்பட்ட கோயில்கள்**

1. கங்கைகொண்ட சோழபுரம் கங்கைகொண்ட சோழீசுவரர் கோயில்
2. கூழம்பந்தல் கங்கைகொண்ட சோழீசுவரர் கோயில்
3. திருவொற்றியூர் ஆதிபுரீசுவரர் கோயில்
4. திருவலஞ்சுழி பைரவர் கோயில்

5. நாகப்பட்டினம் நாகைக்காரோணம்
6. மேல்பாடி அறிஞ்சிகை ஈஸ்வரம்
7. அகரம் கைலாசநாதர் கோயில்
8. திருவையாறு தென்கைலாயம்
9. ஆத்தூர் சோமநாதசாமி கோயில்
10. நார்த்தாமலை திருமலைக் கடம்பர் கோயில்
11. சேரன்மகாதேவி ராமசாமிகோயில் அம்மளாதேஸ்வரர் கோயில்
12. மாம்பாக்கம் முருகேசுவரசாமி கோயில்
13. கங்கைகொண்டான் கைலாசபதி கோயில்
14. சோழபுரம் இராசராசேசுவரம்
15. செங்குன்றம் செயங்கொண்ட சோழீசுவரர்
16. திருப்பத்தூர் அய்யனார் கோயில்
17. இராமநாதன் கோயில் பஞ்சவன் மாதேவீசுவரம்
18. கோலார் கோலாரம்மாகோயில்
19. பெலத்துரு பானேசுவரர் கோயில்
20. நந்திகொண்டா மல்லேசுவரர் கோயில்
21. சிட்டிபெடா பைரவர் கோயில்
22. திருமழபாடி வைத்திய நாதசுவாமி கோயில்
23. மன்னார்கோயில் இராசகோபாலசாமி கோயில்
24. சாத்தூர் மூலஸ்தானம் உடையார் கோயில்
25. கொத்தகரே (மைசூர் மாநிலம்) கோயில்
26. மாத்தோட்டம் (ஈழம்) சிவன்கோயில்
27. தொட்டமளூர் (சென்னைப்பட்டணம், பெங்களூர் மாவட்டம்) கோயில்
28. காவந்தண்டலம் (செங்கை மாவட்டம்)இராசேந்திர சோழீசுவரம்
29. திருவல்லம் திருவையாறு ஈசுவரம்
30. அழகாதிரிபுத்தூர் சூரியன் கோயில்
31. வானமங்கை கைலாசநாதர் கோயில்
32. கன்னியாகுமரி கோனேரீசுவரர் கோயில்

**இராசேந்திரசோழன் கால வீரத்தலைவர்களும், அதிகாரிகளும்**


1. விக்ரமசோழ சோழியவரையனாகிய அரையன் இராசராசன்
2. கிருஷ்ணன் இராமனான் மும்முடிச் சோழப் பிரம்மராயன்

3. மாராயன் அருள்மொழியான் உத்தமசோழப் பிரம்மராயன்
4. ஈராயிரவன் பல்லவராயனான உத்தம சோழப் பல்லவரையன்
5. பாண்டியன் சீவல்லபன்
6. வல்லவரையன் வந்தியத்தேவன்
7. உத்தமசோழ மிலாடுடையார்
8. கங்கைகொண்ட மிலாடுடையார்
9. சத்திரிய சிகாமணி கொங்காள்வான்
10. தண்டநாயகன் வீமையனாகிய இராசேந்திர சோழப் பிரம்மராயன்
11. வீரராசேந்திர பிரம்மாதிராசன்
12. உத்தமசோழகோன்
13. உத்தம சோழப் பல்லவராயன்
14. முடிகொண்டசோழ விழுப்பரையன்
15. விக்ரம சோழச் சோழியவரையன்
16. இராசராச பிரம்மராயன்
17. பாண்டி உதயதிவாகரன் இராசராச நல்லூருடையான்
18. நீலன் வெண்காடன் என்ற இராசராச மூவேந்த வேளான்
19. சேனாபதி மதுராந்தகன் பரகேசரி மூவேந்த வேளான்
20. கொடும்பாளூர் இராசேந்திர சோழ இருக்குவேளார்
21. சேனாபதி அரையன் கிடாரங்கொண்ட சோழன் இராசராச அணிமுரி நாடாழ்வான்
22. இராசேந்திரசோழப் பிரம்மராயர்
23. கங்கைகொண்ட சோழப்பல்லவரையன்
24. வில்லவராசன்
25. இராசராசக் குமணராசன்
26. இராசராச மூவேந்த வேளான்
27. குணநிதி அருமொழி மூவேந்த வேளான்
28. விக்ரமசிங்க மூவேந்த வேளான்
29. விக்ரமசோழ மூவேந்த வேளான்
30. இராசராசேந்திர மூவேந்த வேளான்
31. வீரராசேந்திர தமிழதரையர்
32. திருநீலகண்டபட்டர்
33. கொட்டி அதிராத்ரயாஜி

34. காடவராயர்
35. வீரராசேந்திரமுனைய தரையர்
36. ஆதித்த சூளாமணி
37. கடாரம் கொண்ட சோழ மூவேந்த வேளான்
38. இரட்டபாடி கொண்ட சோழ மூவேந்த வேளான்
39. ஜநநாத மூவேந்த வேளான்
40. மதுராந்தக மூவேந்த வேளான்
41. இராச மூவேந்த வேளான்
42. வீரசோழ மூவேந்த வேளான்
43. இராசராச விசயபாலர்
44. விக்ரம நாராயண மூவேந்த வேளான்

**கங்கைகொண்ட சோழபுரத்துக்கோயிற் கல்வெட்டுகளுக்குரிய மன்னர்கள்**

1. இராசேந்திர சோழன் (பூர்வ தேசமும், கங்கையும், கடாரமும் கொண்டருளின ஐயப்பன்)
2. இராசாதிராச சோழன் (கல்யாணபுரமும் கொல்லாபுரமும் கொண்டு ஆனைமேல் துஞ்சின அண்ணல்)
3. வீரராசேந்திர சோழன்
4. வானவன் மகாதேவி (இராசேந்திரனின் தேவி)
5. அம்மங்காதேவி (இராசேந்திரனின் அன்பு மகள்; குலோத்துங்கனின் தாய்)
6. முதல் குலோத்துங்க சோழன்
7. மூன்றாம் குலோத்துங்கன்
8. கன்னோசியைச் சார்ந்த காஹடவால அரசன். சோழர்களின் நண்பன் மதனபாலன்
9. பாண்டியன் சடாவர்கள் சுந்தரபாண்டியன்
10. விக்ரம பாண்டியன்
11. மாறவர்மன் குலசேகரன்
12. வைப்பூர் திருவேங்கட முடையான் ஏகாம்பரநாதக் காங்கேயன்
13. விசயநகரப் பேரரசன் கிருஷ்ணதேவராயர்.




**கங்கைகொண்ட சோழீச்சுரம் —**
**கோயிலின் தோற்றம்**




ஆடல் வல்லான்
சிற்பம்



ஞான சரசுவதி
சிற்பம்



எசாலம் செப்பேடு




சோழர் கால மதகு – பொன்னேரி




சோழர் அரண்மனை அடித்தளம் –
மாளிகைமேடு அகழாய்வு




அகழாய்வு நடைபெற்ற இடத்தின் நில ஆவணம்
வருவாய்த்துறையினரால் சிறப்பு ஆணையரிடம் அளித்தல்




முதலாம் பராந்தகசோழன் கல்வெட்டு




**வாளின் கைப்பிடி – மாளிகைமேடு அகழாய்வு**



சோழர் கால பானைகள்



சோழர் கால பானைகளும் மூக்குப் பகுதிகளும்




அலங்காரவேலைப்பாட்டுடன் கற்கள்




இரும்பு ஆணிகள்




அகழ்வைப்பகத்தின் தோற்றம்




ஓலைச் சுவடிகள்




**புத்தர் சிற்பம் – கீழ்கொளத்தூர்**



பிராமி மாகேசுவரி – சிற்பங்கள்




குலோத்துங்க சோழன் – தேவியர்களுடன்



அய்யனார் பூரணை புஷ்கலையுடன் – செப்புத்திருமேனி




திருமால் சிற்பம் — ஸ்ரீபுரந்தான்





கலிங்க நாட்டுச் சிற்பங்கள் — செங்கமேடு



அவனிகந்தர்ப்ப ஈசுவரகிருகம் கீழையூர் (இரட்டைக் கோயில்)



யானை சுதைச் சிற்பம் – அழகர் கோவில்

## துறை வெளியீடுகள் – Departmental Publications

| | | |
|---|---|---|
| 1. | தருமபுரி கல்வெட்டுகள் (முதல் தொகுதி) | 9.50 |
| 2. | திருத்துறைபூண்டி கல்வெட்டுகள் | 15.00 |
| 3. | கன்னியாகுமரிக் கல்வெட்டுகள் (நான்காம் தொகுதி) | 7.50 |
| 4. | கன்னியாகுமரிக் கல்வெட்டுகள் (ஐந்தாம் தொகுதி) | 7.50 |
| 5. | நன்னிலம் கல்வெட்டுகள் (முதல் தொகுதி) | 15.00 |
| 6. | நன்னிலம் கல்வெட்டுகள் (இரண்டாம் தொகுதி) | 15.00 |
| 7. | நன்னிலம் கல்வெட்டுகள் (மூன்றாம் தொகுதி) | 15.00 |
| 8. | தக்கை இராமாயணம் (முதல் தொகுதி) | 36.00 |
| 9. | திருக்கோடிகா கல்வெட்டுகள் | 27.00 |
| 10. | தமிழ் கீர்த்தனைகள் | 37.00 |
| 11. | திருக்குறள் பழைய உரை | 43.50 |
| 12. | குருபரம்பரை புராணம் (இரண்டாம் தொகுதி) | 60.00 |
| 13. | திருவீழிமிழலை கல்வெட்டுகள் | 116.00 |
| 14. | விழுப்புரம் இராமசாமி படையாச்சியார் மாவட்ட வரலாறு | 100.00 |
| 15. | திருமலை நாயக்கர் செப்பேடுகள் | 52.00 |
| 16. | நெல்லை மாவட்ட கையேடு | 27.00 |
| 17. | பெருமுக்கல் கல்வெட்டுகள் | 48.00 |

| | | |
|---|---|---|
| 18. | தொல்லியல் நோக்கில் தமிழகம் | 80.00 |
| 19. | தாமரைப்பாக்கம் கல்வெட்டுக்கள் | 30.00 |
| 20. | வரலாறும் கலையும் | 30.00 |
| 21. | கல்வெட்டும் காலாண்டிதழ் 59 | 2.00 |
| 22. | கல்வெட்டு காலாண்டிதழ் 60 & 61 | 4.00 |
| 23. | கல்வெட்டு காலாண்டிதழ் 62, 63, 64 (தனிப் பிரதி) | 5.00 |
| 24. | ஆய்வில் பூத்த மலர்கள் | 90.00 |
| 25. | தமிழர் நாகரீகம் | 221.00 |
| 26. | திருமலை நாயக்கர் அரண்மனை துணை மடல் | 5.00 |
| 27. | Padavedu Excavations | 22.00 |
| 28. | Thiruthani Velancheri Copper Plates | 30.00 |
| 29. | Studies in Ancient Townships of Pudukottai | 80.00 |
| 30. | Collected Papers by R. Thirumalai | 200.00 |
| 31. | Collected Papers by Natana. Kasinathan | 50.00 |
| 32. | Thirukkoyilur Excavation | 134.00 |
| 33. | Metropolis of Medieval Cholas | 1.50 |
| 34. | Taminadu Archaeology Perspectives in English | 44.00 |
| 35. | New light on Tamil Art & culture | 15.00 |
| 36. | Excavation at Mangudi | 76.00 |
| 37. | Excavation at Perur | 64.00 |

| | | |
|---|---|---|
| 38. | திருவலஞ்சுழி கல்வெட்டுக்கள் | 96.00 |
| 39. | திருவாரூர் மாவட்டத் தொல்லியல் வரலாறு | 155.00 |
| 40. | விருதுநகர் மாவட்ட வரலாறு | 128.00 |
| 41. | The Pandian Townships Part - I | 521.00 |
| 42. | The Pandian Townships Part - II | 533.00 |
| 43. | Tarangampadi (Tranqubar) Excavation and Conservation Report | 31.00 |
| 44. | Excavations of Archaeological Sites in Tamilnadu (1969-95) | 66.00 |
| 45. | தமிழக கோயிற் கலைகள் | 17.00 |
| 46. | Tarangampadi - R.Nagasamy | 22.00 |

## புதிய வெளியீடுகள் – New Arrivals

| | | |
|---|---|---|
| 1. | கல்வெட்டு காலாண்டு இதழ் – 63, 64, 65 | 5.00 |
| 2. | பாபாநர்சம் கல்வெட்டுகள் – தொகுதி – 1 – 2 | 173.00 |
| 3. | Excavations of Archaeological Sites in Tamil Nadu | 66.00 |
| 4. | தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள் 2004 | 136.00 |
| 5. | ஜம்பை ஓர் ஆய்வு | 30.00 |
| 6. | தமிழ்நாட்டுச் செப்பேடுகள் – தொகுதி – 1 | 52.00 |
| 7. | Alagankulam - an ancient Roman port city of Tamil Nadu | 94.00 |
| 8. | கோவை மாவட்டத் தொல்லியல் கையேடு | 41.00 |
| 9. | தரங்கம்பாடி ஓலை ஆவணங்கள் | 28.00 |
| 10. | தஞ்சாவூர் வட்டக் கல்வெட்டுகள் | 54.00 |
| 11. | Rock Art of Tamil Nadu - by T.S. Sridhar | 53.00 |

| | | |
|---|---|---|
| 12. | Report on conservation of monuments | 93.00 |
| 13. | தமிழகத் தொன்மைச் சின்னங்கள் | 53.00 |
| 14. | ஆண்டிப்பட்டி அகழாய்வு | 41.00 |
| 15. | Modur Excavation Report | 40.00 |